DHRUVA.

A PURANIC DRAMA

IN TAMIL.

BY
BRAMHASRI BHAGAVATHA
Ranganathacharyar Avergal

PUBLISHED BY
G. Bhoovarahacharyar
Anjaneya Vilas Book Depot,
KUMBACONAM.

PRINTED AT THE
"YATHARTHAVACHANI PRESS"
KUMBACONAM.

1920.

Copy Right Registered]

[PRICE AS. 12

The first three forms were printed at
The Gopala Vilasa Press,
Kumbaconam.

ஸ்ரீ

ஹரயே நம:

துருவன்

என்ற

நவரஸங்களுமடங்கிய புராண நாடகம்.

கும்பகோணம்

பிரம்மஸ்ரீ பாகவத ரங்கனாதாசாரியார் அவர்களால்

இயற்றப்பட்டு

கும்பகோணம்

ஆஞ்சநேய விலாஸ புத்தகாலயம்

ஜி. பூவராகாசாரியாரால்

வெளியிடப்பட்டது.

கும்பகோணம்

யதார்த்தவசனி அச்சுக்கூடம்.

1920.

[விலை அணா 12.

காப்பிரைட்.]

நாடகப்பாத்திரங்கள்.

உத்தானபாதன்	...	சுவாயம்புமனுவின் ஜேஷ்டபுதல்வன்.
சுநீதி	...	அவருடைய மூத்த மனைவி.
சுருசி	...	அவருடைய இளைய மனைவி.
பூர்ணபுத்தி	...	மந்திரி.
சம்மோதகர்	...	விதூஷகன்.
துருவன்	...	மூத்தமனைவியின் குமாரன்.
உத்தமன்	...	இளையாளின் குமாரன்.
நாரதர்	...	தேவரிஷி.
வைரசித்தன்	...	கொலையாளி.
தபோதேவர் யோகசாகரர்	...	இந்திரனுடைய தேவதூதர்கள்.
நலினீ	...	சுநீதியின் சேடி.

மற்றும் மூன்று ரிஷிபத்தினிகள், உத்தியோகஸ்தன், சேவர்கள், சேடிகள் முதலியவர்கள்.

DEDICATED

TO HIS

Revered Guru

AND

Beloved Grandfather

Vedhamurthi

Bhagavatha Samacharyar Avergal

WELL-KNOWN AS

Bharathacharyar

The Famous Expounder of Puranas, and Sastras,

The Great Sanskrit Scholar of Eminence, &c.

By the Author.

இதை வெளியிட்டவரின் விண்ணப்பம்.

இந்த நாடகத்தில் நவரஸங்களும் நிறைந்துள்ளன. புராணசம்பந்தமான இப்பிரசித்த நாடகத்தின் கௌரவம் இதில் விசேஷமாய் எடுத்துக்காட்டியிருக்கும்பக்திரஸத்தால்தான். எல்லோரும் படிக்கவும் நடிக்கவும் இனிமையாயிருக்கும்படி இந்நாடகம் எழுதப்பட்டிருப்பது மெச்சத்தகுந்ததேயாகும். கௌரவ நாடகச் சங்கங்கள் (Amateur Dramatic Societies) இப்புத்தகத்தின்படியே நாடகத்தை நடத்தினால், ஆட்டம் நான்கு மணிக்குள் முடிவடைவதுடன் இடை இடையே சீன்கள் ஜோடிக்கப்படுவதற்காகவேண்டி ஏற்படும் வீணான காலதாமதமில்லாமல் பார்ப்பவர்களின் கவனம் நாடகத்திலேயே நிற்கும். இதின் ஆசிரியர் பிரசித்த பண்டித குலத்தைச் சேர்ந்தவராதலால் அவருக்கு புராணங்களிலும் சாஸ்திரங்களிலுமுள்ள பாண்டித்யத்தை இப்புத்தகத்தில் வெகு அழகாய்க் காட்டியிருக்கிறார். எல்லோரும் சுலபமாய் அறிவதற்காகவே பிரசித்தமான வர்ணமெட்டுகளில் பாட்டுகளும் போடப்பட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில காரணங்களைக் கொண்டு அவசரமாக இப்புத்தகத்தை அச்சுக்கு நான் கொண்டு வந்ததில் சில எழுத்துப் பிழைகள் ஏற்பட்டுவிட்டபடியால் அவைகளை இதன் ஆசிரியரும் இதைப் படிப்போர்களும் மன்னித்துக் குணபாகங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

G. B.

முதல் அங்கம்.

1-வது சீன்

சுருசியின் அந்தப்புரம்.

(உத்தானபாதனும் சுருசியும் பாடிக்கொண்டு நிற்கிறார்கள்.)

உத்தானபாதன்:— கண்மணி! லோகத்தில் ஜோடிசேருவது சாமான்யமல்ல. ஸ்திரீ புருஷர்கள் அப்படி அமைந்துவிட்டார்களோ பிறகு பிரம்மானந்தம்தான் அது எவ்வகை என்று கூறவும் முடியுமா? என் அருமை காதலி! நான் அதை தற்காலம் அனுபவிக்கிறேன். என் பாக்கியமே பாக்கியம்

சுருசி:— ஸர்வாங்கசுந்தரா! என் பிராணநாதா! எனக்கும் எப்படி இருக்குமென்று நீர் எண்ணுகிறீர்?

உத்தான:— ஹா! சிருங்காரரஸமே! உன் ப்ரேமபாசம், உன் முகவிகாசம், புருவ விலாசம், ரமணஸாகாஸம், அழகிய பரிகாசம், இனியஸரசஸம், இவைகளாலேயே வெளிப்படவில்லையா

சுருசி:— என் ஆருயிர் அரசே! நான் இவ்வாறு உணருவது என் குணமல்ல எல்லாம் தங்களால்தான். முகத்தின் அழகுக்கு, கண்ணாடியா காரணம். தாம் இவ்வாறு என்னை ஆதரிக்காவிடில் என்னை யார்தான் மதிப்பார்கள்.

உத்தான:— கண்ணாட்டி! உன் பேரழகைக் கண்டபின்பு புருஷனென்றிருப்பவன் உன்னை தொடாமலிருப்பானா! அப்படி யிருந்தால் அவன் புத்திகலங்கிய பித்தாயிருப்பான். அல்லது ஜகங்களை ஜயித்த யோகியாயிருப்பான். கட்டழகி! கல்களெல்லாம் மாணிக்கமாகுமா! யானை எல்லாம் ஐராவதமா

குமா! புருஷரெல்லாம் புருஷோத்தமனுவாரா! ஸ்திரீக ளெல்லாம் ஸுருசியாவர்களா! ஹே ஜகன்மோஹினி! அந்தப்பரமசிவன் மன்மதனை கண்ணுல் எறித்தார். அம்மன் மதனை நீ உன் கண்ணுலேயே உயிர்ப்பிவிக்கிருய். அடிக்கடி எனக்கு எற்படும் அந்த மன்மதனுடைய தாபத்தை நீக்க நான் நீருடும் தாமரை ஓடை நீயே! உன் முகம் தான் கம லமலர். இருபுஜங்கள் அதின் நாளம் உன் திருமேனிதா ன் அதின் தெள்ளியநீர். உன் இடைதான் இறங்கும் துறை. உன் விழிகள் தான் சலிக்கும் மீன்கள். உன் கருங்கூந்தல்க ள் பாசிக்கொத்துகள். உன்குசங்களே அன்னங்கள். அதிக மாய்ச் சொல்வானேன், பார்க்கத்தகுந்தது உன் முகம். மு கறத்தகுந்தது உன் முகவாசனை. கேட்கத்தகுந்தது உனது குரலோசை. உட்கொள்ளத் தகுந்தது. உனது அதாரஸம். தொடத்தகுந்தது உன் சரீரம். எண்ணத்தகுந்தது உன் யௌவனமே.

சுருசி;— ஆ! ஆ! போதும் இந்த பிரஸங்கமெல்லாம். ஐயோ! பாவம் மற்றெவரையும் கண்ணெடுத்துப் பாருதவர். ஏகப த்னீவிருதம். கேட்பானேன்.

உத்தான:— கண்ணே! என்ன சொன்னுய்! நீ என்னை பூஷிப்ப தைக்காட்டிலும் தூஷிப்பதுதான் எனக்குவிசேஷ சந்தோ ஷத்தைத் தருகிறது அது தான் எனக்கு மேன்மை. ஒரு நாள் நாங்கள் விநோதமாயிருக்கும் சமயம் உன் முகக்குறி யை அறிந்து அந்த குறங்கு சுநீதியை காறணமின்றி கான கத்திற்கே நான் அனுப்பிவிடவில்லையா! உன்மாசற்ற திரு மேனியைத்தினம் தரிசிக்க இம்முகத்தை அவள் வசிக்கு ம் திசைக்கும் இனி திருப்புவேன் என்று நினைக்கிருய்.

சுருசி;— எல்லாம் இப்பொ இப்படித்தான் இருக்கும். பின்னிட்டு.

உத்தான:— கண்மணி! ஏன் இவ்வாறெல்லாம் எண்ணுகிருய்! உன்னிடம் ஈடுபட்ட இம்மனம் இனி அகலுமோ! பின்னி ட்டு என்கிருயே!

சுருசி:- ஸந்தானம் உண்டானபிறகு.

உத்தான:- யாருக்கு ! அவளுக்கா ! அவளிருப்பதையே முற்று ம் மறந்த இவ்வேந்தனுலா சந்தானம். என்ன வார்த்தை இது.

சுருசி;- அதை பரீக்ஷிக்கவும் நமக்கு வேளை அனுகூலமாக இல்லையே. பாழும் தைவத்திற்கு கண்ணுண்டோ ! திரிலோகேசனை வெட்கிக் கச்செய்யும் நம்பாக்யமெல்லாம் புத்திரனில்லாமையால் நீரில்லா ஸமுத்ரம்போலவும், சந்திரனில்லா இறவு போலவும், ஒளியில்லா இரவிபோலவும், ஆகிவிட்டது. புத்திரனில்லா அந்தப்புறம் அந்தபுரமோ, அப்பரமசிவனைப்போல் சாம்பலைப்பூசி சடை தரித்து அம்மணமாய் குதித்தோடி வரும் குழந்தையுடன், கந்தையை உடுத்து கூழை உண்டு கூரையின் கீழ் இருப்பதே மேன்மை.

உத்தான:- பெண்ணே ! ஆம் வாஸ்தவம் தான் ! இதைப்பற்றி முடிவான யோசனை சொல்ல நம் பூர்ணபுத்தி இப்போது வருவான்.

[ஓர் சேடி வருகிறுள்.]

சேடி;- மகாருஜா ! வெளியில் மந்திரியும் விதூஷகரும் காத்திருக்கிறுர்கள்.

உத்தான;- வறச்சொல் [சேடி போகிறுள்,]

கண்ணேப் பார்த்தனையா !

பூர்ணபுத்தியும் விதூஷகனும் சச்சரவுசெய்து
கொண்டு வருகிறுர்கள்,

விதூஷ;- சாதாறணமான கோணலா ! இது பெருத்த கோணல் ! எப்படி நிமிர்த்தமுடியுமோ ?

[சமீபத்தில் வற இருவரும் வணங்குகிறுர்கள்]

உத்தான;- மந்திரி முடிவாய் என்னயோசித்தாய் நாம் முன்னம் செய்த எத்தனங்களெல்லாம் வீணுய் முடிந்ததால் இனி ஆறம்பிக்கத்தகும் கிரமம் பிரதானமாயிருக்கவேண்டுமல்லவா ?

பூர்ண:- ஆம், உத்தமமாகத் தானிருக்கவேண்டும் இனி நம் செயல்கள். கர்மகாண்டங்களில் சொல்லும் ஜபம், ஹோமம், தானம், பிராம்மண சந்தர்ப்பணம், முதலியவைகள் பதின்மடங்காய் செய்யப்பட்டிருக்கின்றன, தாங்கள் தினஞ்செய்யும் நித்ய தானங்கள் நவக்கிரஹங்களை சந்தோஷிக்காமலிருக்க நியாயமில்லை வேதங்களையும், புராணங்களையும், சாஸ்திரங்களையும், இக்குலத்தின் வழக்கங்களையும், ஆராய்ச்சி செய்தால் ஸ்ரீநாராயணரின் ஆராதனையே அவஸ்யமாயிருக்கிறது. தாங்கள் நடத்திவரும் நித்யம் நைமித்யம் முலிய கர்மங்களாலேயே அந்தபகவான் களிப்படைவார் அவரை சீக்கிறத்தில் பிறஸன்னமாக்கி நினைத்தவறன்களை தறச் செய்வதற்கு தவமென்பது அவஸ்யம். தவத்திற்கு மன நிலைவேண்டும். அது தங்கள் தற்கால நிலைமைக்கு அசாத்தியம் உலோகானுபவங்களோ பலவாறாய் இருக்கின்றன அம்பிகையை ஆராதிப்பதும், சிவனைபூஜிப்பதும், புண்ணியதீர்த்தங்களில் நீராடுவதும், திவ்யமூர்த்திகளுக்கு, ஆலயங்கட்டி கும்பாபிஷேகம் செய்வதும், சாதுக்களை உபசரிப்பதும், மற்றும் பல உபாயங்களுமிருக்கின்றன. என்ன நடத்தலாமென்று நான் யோசிக்கிறேன்,

விதூ;- இவ்விஷயத்தில் என் அபிப்பிராயம் ஒன்றுண்டு, உபாயம் ஒன்றேதான் அதாவது சந்தானமே அபாயம், இல்லாமலிருப்பதுதான் உபாயம், இருப்பது எப்பவும் இருக்கும். இல்லாதது எப்பவும் இல்லாது,

பூர்ண;- [விதூஷகனை அடக்கி] விதூஷகா பேசாமலிரு, சகுணத்தடையாய் ஒன்றும் பேசாதே! எல்லாவற்றிலும் ஹாஸ்யம் தானா! மகாராஜா! ஸாதுக்களை ஸேவிப்பதுதான் தங்கள் தற்கால நிலைக்கு உசிதமாயிருக்கிறது, ஆதலால் தாங்கள் அலங்கத்துக்கு அப்பாலுள்ள அகரு தோட்டத்தில் இருந்து ஸப்தரிஷிகளைக்குறித்து தவம் செய்தால் கட்டாயம் புத்ரபாக்கியம் ஏற்படுமென்று எனது சித்தாந்தம்.

சுருசி;- பிராணபதியே ! பூர்ணபுத்தி ஆடிய வார்த்தைகள் அழகாகவே இருக்கின்றன. ஆ! பூர்ணபுத்தி என்றநாமம் அவருக்குத்தான் தகும். சற்று தேகசிரமம் பாராமல் தாம் அவ்வாறே செய்து தீரவேண்டும்.

உத்தான:- பூர்ணபுத்தே' நீ சொல்லியபடியே நான் அகருத் தோட்டத்திற்குச்செல்கிறேன். முன்போலவே இராஜ்யகாரியங்கள் சரிவர நடந்துவரட்டும். மெத்த சந்தோஷம். நீங்கள் விடைபெறலாம்.

பூர்ண:- உத்திரவு.

விதூஷ;- உத்திரவு.

[இருவர்களும் போகிறார்கள்]

உத்தான;- [அவஸரத்துடன்] காந்தே' நான் இனி ஆலஸ்யம் செய்யக்கூடாது. நான் போய் ஸப்தரிஷிக்களை பிரார்த்திக்கிறேன். எனக்கு உத்திரவு கொடு.

சுருசி;- நானும் அறண்மனை வாசல்வரையில் தொடருகிறேன்.

[இருவர்களும் போகிறார்கள்]

2-வது ஸீன்.

அரண்மனையில் ஓர் பாகம்

[பூர்ணபுத்தி ஓர்பாத்திரத்துடன் பிரவேசிக்கிறான்]

பூர்ண;- ஆ' என்ன ஆச்சரியம். ஜகதீசா ! உனக்குநமஸ்காரம். உனது அபாரசக்தியைக்கண்டேன். கடல்நிலமாய் நிற்கும். நிலம் கடலாய் பெருகும். கல்விமான்களே மதியை இழக்கிறார்கள். கல்விஎன்றால் சாமான்யமான கல்வியா ? நான்கு வேதங்கள், ஆறுசாஸ்திரங்கள், பதினெட்டு புராணங்கள், அறுபத்தி நான்குகலைகள், இவைகளை சம்பூர்ணமாய் கற்றறிந்த உத்தானபாதருக்குமா அக்யானம், விகல்பம், வியாமோகம், புத்திநாசம். எந்த குலத்தில் பிறந்தாலென்ன, எவ்வித கீர்த்தியை பெற்றாலென்ன. எவ்வகை பராக்கிரமமி

ருந்தாலென்ன. தீரனும்வீரனும் சூரனுமாயிருந்தாலென்ன. உள்ளே உருளும் காமசுருளை வெளியே விரித்திட்டு தானு மத்தோடு பிறனுவதா ? இவ்விஷயங்களென்பதற்கு இவ்வகை விஷமுண்டா. சண்டையும் தெண்டமும் பெண்ணாலே, குத்து தட்டு வெட்டு திட்டும் பெண்ணாலே, மண்டைஉடைவதும், மானமழிவதும் மங்கையாலல்லவோ மானிடமே ! எவ்வகை மோகவலையில் சிக்கியிருந்தாலும் ஆலஸ்யமான சமயத்திலும் கூடவா புத்தியை இழப்பது. விதூஷகன் சொல்லிவந்ததின் தத்துவம் இப்போதுதானே வெளியாகிறது.

[விதூஷகன் பிறவேசிக்கிருன்,]

விதூஷகா ! மேல் விழாதே ! என்ன இது ! அடங்காச்சிரிப்பு ! என்ன விசேஷம்.

விது;- ஓ ! ஓ ! ஓ ! வாருங்கள். மந்திரியாரா ! வந்தனம். என்ன விசேஷமா ! உங்கள் கையில் சேஷமிருக்கிறது தான் விசேஷம்.

பூர்ண:- (விசனத்துடன்) விதூஷகா ! நடந்ததெல்லாம் உனக்கு தெரியும்போலிருக்கிறது. என்ன இப்படி நடந்துவிட்டதே ! சப்தரிஷிகள் அருளால் வறம்பெற்ற பழத்தை தரும் பொழுது பத்தினிமார்களிருவர்களிருக்க எல்லா நீதி நெறிகளையும் அறிந்த நம்மருஜன், அங்கந்தளர்ந்து மெய் மறந்து மானம் துறந்து கானகத்தில் திகைத்திருந்து தனிமையில் வருந்தும் ஓர் பெண்பாலை மறப்பதா ? இனி நான் என்ன பண்ணுகிறது.

விதூஷ;- நீ என்ன பண்ணயிருக்கிறது ? மகாருணியம்மா பண்ணிவைத்திருக்கிருளே இந்தக்கிண்ணத்தில். அதில் ஸுருசி ருசி பார்த்து வைத்திருக்கும் மாம்பழத்தின் கொட்டையையும் சக்கையையும் கங்கையின் புண்ணிய ஜலத்தால் நசுக்கி ரஸமெடுத்து, அதை ஸுநீதியம்மாளிடம் கொண்டு போய் அவளை அதை அருந்தச்செய்தால் அவள் கட்டாயம்

கர்பம் தரிப்பாள் என்றே என் சித்தாந்தம். இதுதான் நமக்கும் அந்தம். அவளுக்கும் ஆநந்தம்.

பூர்ண:- ஆ! இது ஸரியான யோசனைதான், தைவமென்று எல்லோருக்கும் மேல் ஒன்றிருக்கிறதல்லவா. கையில் சேஷமிருந்தது விசேஷமாய் முடிந்தது.

விதூஷ;- உங்களிடம் அவளுக்கு எப்பவும் விசுவாசம் உண்டு உங்கள் மந்திரத்துக்கு அவள் கட்டாயம மயங்குவாள். கயிரை நன்றாய் திரித்துவிடுங்கள் நீங்கள் மந் திரி. தானே.

பூர்ண:- சம்மோதா என் மந்திரம் மட்டில் போதாது. பின்பு உன் தந்திரமும் வேண்டும்.

விதூஷ:- சரி உங்கள் மந்திரம் என் தந்திரம் இவைகளைச் சேர்த்து இராஜனுக்கு ஓர் பெரிய யந்திரத்தைக் கட்டிவிடுவோம். வாருங்கள் போவோம்.

[இருவர்களும் போகிறார்கள்,]

3-வது சீன்.

சுநீதியின் வசதி

சுநீதி:- [அழுதுகொண்டு] ஹே! ஈசா ஹிருதயநிவாஸா! கருணாவாஸா! ஏன் என்னிடம் இவ்வளவு உபேக்ஷை, இன்னமும் நான் அனுபவிக்க வேண்டுவதும் உண்டோ! ஹா! என்ன அவ்வித பாபத்தை நான் செய்தேனோ! அனுகூலர்களான தம்பதிகளைப் பிரித்தேனோ! பொய்யான வார்த்தைகளாடி வாழும்பெண்ணை குலத்தினின்றும் நீக்கச் செய்தேனோ! ஐயோ! நான் என்ன செய்வேன். இருப்பதால் நான் ஒருபயனையும் அறியேன். யாதொரு சுகமுமில்லை. பிறருக்கு உபகாரமுமில்லை ஹா! இறப்பதே மேன்மை. என்கஷ்டங்கள் தீறும். அந்த தம்பதிகளின் மனம் குளிறும்! ஹா! இனி என்ன செய்யலாம். முன்னமேயே பூ

ர்ணபுத்தி என்னிடமிருந்து வாக்குதத்தம் வாங்கிவிட்டா னே! என்ன புத்தி மோசம்போனேன். அவனுடைய அனுமதியன்னியில் என் உயிரை நான் இழக்கக்கூடாததாயிருக்கிறது. ஹே! தேவா! இதுவும் உன் மாயையா. கணவனால் விலக்கப்பட்டவளென்றே எனக்குத் தனிமையான தண்டனை உண்டு. ஆம். அசத்தியம் பேசினவளென்றும் குற்றம் சாற்றப்படவேண்டுமா ஹா! தெய்வமே! என்கதி இப்படியா ?

[பூர்ணபுத்தி பாத்திறத்துடன் பிரவேசிக்கிறான்]

பூர்ண:— தாயே! நமஸ்காறம்

சுநீதி;— (துக்கக்குறலோடு) யார் அங்கே! பூர்ணபுத்திபா ? வாருங்கள்

பூர்ண:— அம்மணி, என்ன இது ' இவ்விதம் நீங்கள் எக்காலத்திலும் துக்கிக்கலாமா ? நம்நாட்டிற்கே க்ஷேமமா? பிறஜைகள் தம்பெண்டு பிள்ளைகளுடன் வாழவேண்டாமா ? நீங்களே மனம் சமாதானம் செய்துகொள்ளவேண்டும்.

சுநீதி:— பூர்ணபுத்தி! நீர்தான் சொல்லுங்களேன். நான் எதைக் கண்டு சமாதானமடைவேன். என் மனம் பதறுகிறது பெண்டீர்களுக்கு கணவனே தாய், தந்தை, குரு, தைவம் என்று சொல்வார்கள் அக்கணவனே என்னைக் கண்ணெடுத்துப்பார்ப்பதில்லை. என்றால் எனக்கு என்ன வேறு துக்கம் வேண்டும். என்னை தன் பாரியை என்று சொல்லவும் அவர் நாணடைகிறார் அந்த சுருசிதான் தன் கண்ணாட்டி என்று சீராட்டுகிறார். அவர் வெறுத்த இந்தசரீரத்தை சிரத்தையன்றி கரைத்து வருகிறேன். தங்கள் வரவை எதிர்பார்த்திருந்தேன். சற்று நில்லும். உயிரை விலக்குகிறேன்.

[இறக்க முயலுகிறாள்]

பூர்ண;— அனுமதி இல்லை, அனுமதி இல்லை. சற்றுபொறுங்கள்

சுநீதி— ஹா! தெய்வமே! மந்திரிக்கும் இவ்வகை துவேஷம் என் மீது உண்டாகவேண்டுமா?

பூர்ண;— தாயே! அப்படிச்சொல்லாதீர்கள் எனக்கு துவேஷமில்லை. சற்று சமாதானமடையுங்கள். ஓர் உபாயத்தைச் சொல்லுகிறேன்.

சுநீதி:— யாதொரு உபாயமும் இதுவரையில் காணேன். நான் இனிபொறுப்பதால் என்ன சாதகம் உண்டு. சந்திரசூரியர்கள் திசைமாறி உதயமடைந்தாலும் அப்பாவியின் மோகவலையிலிருந்து மகாராஜா வெளிவாகார்.

பூர்ண:— தாயே! எதுவும் உலகில் நில்லாது. எல்லாம் அழிவுள்ளது தான். உங்கள் துக்கமும் தீரும்.

சுநீதி:— (பெருமூச்சுடன்) ஹா! அப்படியா! அதுவும் ஏற்படுமா! எப்பொழுது?

பூர்ண:— இப்பொழுது தான்.

சுநீதி;— ஐயோ! எத்தனமன்னியில் எப்படி காரியம் கைகூடும்

பூர்ண:— எத்தனங்களைச் செய்துதான் இங்குவந்தேன் இதைப்பாருங்கள்.

[மறைத்து வைத்திருந்த கிண்ணத்தைக் காட்டுகிறான்]

சுநீதி:— என்ன அது

பூர்ண:— இதற்குள்ளிருப்பதை நீங்கள் அருந்தவேண்டும்.

சுநீதி;— அது இன்னதென்று நீங்கள் சொல்லியபின் நான் அதை அருந்துகிறேன். முதலில் சொல்லுங்கள்

பூர்ண;— அம்மணி! இதில் ஒரு ரஹஸ்யமுண்டு அருந்துங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், நானிருக்கிறேன்.

சுநீதி:— [பாத்திரத்தை கையில் வாங்கிக்கொண்டு] ஈசுவரா! எல்லாம் உன் பிரஸாதமே! இது வரையில் இந்த பூர்ணபுத்தி என் மீது கேடுநினைத்தவனல்லன். என் அதிர்ஷ்டம் எப்படி

யுண்டோ! தெரியவில்லை. ஆ! உலகில் பற்றற்றவளான எனக்கு யாதாலுலுமென்ன? [பூர்ணபுத்தியை நோக்கி] அருந்தலாமா? தைரியம் தருவீர்களா?

பூர்ண:-தாயே! ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அருந்துங்கள்
[ஸுநீதி அருந்துகிருள்]

(தனக்குள்) இவ்வாறேதான் நான் தந்திரம் செய்யவேண்டும். காரணத்தை தெரிவித்துவிட்டால் இந்த காரியம் முடியாமல்போகும்.

சுநீதி:- [ஸந்தோஷத்துடன்] ஆஹா! இதுமாம்பழ ரஸம். வெகு ருசியாகத்தானிருக்கிறது. பூர்ணபுத்தி! ஏது இது. இப்போதாவது விளங்கச்சொல்லுங்கள்.

பூர்ண:- அம்மணி! பாதகமாயிருப்பதை நான் ஒருநாளும் தரமாட்டேன். இது ஸப்தரிஷிகளின் அருள் பெற்ற ஓர் மாங்கனியின் ரஸம்.

சுநீதி:- ஸப்தரிஷிகளா! ஆஹா! [மேல்நோக்கி] நமஸ்காரம்.
[கைகூப்புகிருள்]

அது எப்படிவந்தது.

பூர்ண:- நம்ப மகாராஜா தவம்புரிந்தார் அதிலை கிடைத்தது.

சுநீதி;- (கலவரத்துடன்) நம்ம மகாராஜாவா! ஏன் அவர் தவம் புரிந்தார்.

பூர்ண:- சந்தானத்திற்காக.

சுநீதி:- (மிகுந்த திகிலுடன்) ஏதோ! பயமாகிறதே! விளங்கச்சொல்லுங்களேன்.

பூர்ண.- ஏனம்மணி! பயம். சந்ததியுண்டாகுவதற்காக நம்ம மகாராஜா ஸப்தரிஷிகளை குறித்து தவம்செய்தார். அம்மகான்கள் பிரஸன்னர்களாகி வீரியபூர்ணமான ஓர் மாம்பழத்தை மகாராஜாவிடம் தந்து பத்தினிக்குக் குடுக்கும்படி சொல்லி மறைந்தார்கள் அதை மகாராஜா சுருசியிடம் கு

டுக்க, அவள் அதின் ரஸத்தைமட்டில் பானம்செய்து மீர்ந்ததை எரிந்துவிட்டாள். ஒருவருக்கும் தெரியாமல் நான் அதை சேகரித்து கங்கையின் ஜலத்தால் அதை ரஸமாக்கி உங்களிடம் கொண்டுவந்து குடுத்தேன்.

சுநீதி:- ஐயோ ! நான் உட்கொண்டது அதுதானோ !

பூர்ண:- ஆம். அப்படியே தான் நான் கொண்டுவந்தேன்.

[ஹா வென்று சுநீதி அடங்கா துக்கத்துடன் பூமியில் வீழ்கிறாள்.]

தாயே! ஏன் இந்த துக்கம்! யோசிக்கவேண்டாம் அந்த பழத்தின் எல்லா பாகங்களும் வீரியபூர்ணமாதலால் அவைகளின் ஸாரபாகமாகிய கொட்டையையே உண்ட உங்களுக்கு கட்டாயம் சந்ததியுண்டாகும். இது சத்தியம்.

சுநீதி:- ஐயோ ! எனக்கு சந்ததியும் வேண்டுமா !

நாதநாமக்கிரியை ஆதி.

பழத்தை தந்து என்னை
பழிக்கு பாத்திரமாய் செய்தீர் (பழ.)

ஏது இது உங்களுக்கு
சேதி சொல்லுங்களிப்
போதே எனக்கு என்ன
சூதோ வென்று நான் கேட்டும் (பழ.)

ஆனதை எல்லாம் மறந்து
மானத்தை கருதாமல்
கானகத்தி லுள்ளவள்சந்
தானமடைய பார்த்தீர். (பழ.)

ஐயோ! எதற்காகவோ இவள் கணவனால் விலக்கப்பட்டாளென்று என்னை எல்லோரும் அவமதிக்கிறார்கள். ஐயோ திருட்டுகர்பத்தையும் அடைந்தாளென்றும் குழந்தையை பெற்றெடுத்தாளென்றும் அவமதிப்பு எனக்கு ஏற்படவேண்டுமா ? எனக்கு இதுவும் கார்த்திருந்ததா ?

பூர்ண:- [முகம் வெளுத்தது] (தனக்குள்) அய்யய்யோ ? கிணரு வெட்ட பூதம் பிறப்பட்டதே ! நான் என்னசெய்கிறது. (வெளியில்) அம்மணி அப்படி ஆகாது.

சுநீதி;— பூர்ணபுத்தி ! மகான்களின் வாக்கு வீணாகுமா ! கட்டாயம் எனக்கு ஓர் புதல்வன் உண்டாகுவான். நான் இனி என்னசெய்வேன். நீங்கள் இரகசியமாய் இரஸத்தைக்கொண்டுவந்ததால் மகாராஜாவுக்குமல்லவோசந்தேகமேற்படும்

பூர்ண;— மகாராஜாவுக்கு நான் இதை தெரிவித்துவிடுகிறேன் போதுமல்லவா!

சுநீதி;— போதுமா! உங்கள் இருவர்களுக்கும்மட்டில் இவ்விஷயம் தெரியக்கூடும் ? எல்லோருமறிய ஒருநாள் மகாராஜா என்னுடனிருக்கவேண்டும். இது ஓர் அசாத்யமானகார்யம் நீங்கள் இதில் என் தலையிடுகிறீர்கள் ? ஏன் உங்களுக்கு அதிகசிரமம். ஓர் உயிர்தானே! போகட்டும்.

பூர்ண;— எனக்கு அப்படி எண்ணமிருந்திருந்தால் நான் இவ்வளவுதூரம் காரியங்களை கைகொண்டிருக்கமாட்டேன், இதில் எனது பூர்ணபுத்தியைக்காட்டுகிறேன். உங்களிஷ்டப்படியே உலகமறியுமாறு ஓர் இரவு மகாராஜனை உங்களகத்திலிருக்கச்செய்கிறேன்.

சுநீதி:— அப்படியானால் மெத்தவும் சந்தோஷம். அடுத்தவாரத்துக்குள்ளாகவே இக்காரியம் நடந்துவிடவேண்டும்.

பூர்ண;— அஞ்சாதேயுங்கள். அப்படியே செய்கிறேன், போய் வருகிறேன். (போகிறான்)

சுநீதி;— உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது மறக்கக்கூடாது.

பூர்ண;— [போய்க்கொண்டே] அப்படியே

[போய்விடுகிறான்.]

சுநீதி:— இதில்தான் பூர்ணபுத்தியின் திறமையை பரீக்ஷிக்கவேண்டும். எனக்கும் நற்காலம் பிறக்கும்போலவே இருக்கிறது. பொருப்பார் பூமியாள்வார் என்ற வசனம் சத்யமே

[படுதா விழுகிறது]

4-வது ஸீன்.

நடுக்காடு,

பூர்ண:— (தனக்குள்) நானும் வெகு தந்திரமாகத்தான் காரியங்களை முடித்து வருகிறேன், இராஜனையும் வேட்டையாட விட்டேன். (திரும்பி) என் இதற்குள் மகாராஜா திரும்பி வருகிறார் ?

மகாராஜா வருகிறார்
மாண்டு ஏகம்.

உத்தான:— பாரடா பூர்ணபுத்தி பெரியதான பன்றிகளை (பார)
கும்பல் கும்பலாகமேலே கிளம்புவதே அழகு அன்றோ
நம்பவேண்டாமினி இந்த அம்பினாலே கொல்லுகிறேன் (பார)
எளிதாக மாளுமென்றே எண்ணிடவேண்டாம் நண்பா
எண்ணில்லாத கூட்டமிது தின்னமாக மடிந்துவிடும் (பார)

அப்பா திரிமரத்தின் அப்பாலுள்ள அடர்ந்த புதரில்தென்படும் அப்பன்றிகளை இதோ ஒருநொடியில் கொன்று வருகிறேன் பார். [ராஜன் விரைவாகபோகிறான்]

பூர்ண:— [தனக்குள்] சுநீதியின் காரியம் எப்படியாவது கைகூட வேண்டும் நானும் அம்மரத்தினடியில் நின்றிருந்து வேட்டையின் அழகை காண்கிறேன். [செல்கிறான்]

ஓர் உத்தியோகஸ்தன் வருகிறான்.

உத்தி:— நமஸ்காரம்.

பூர்ண:— (திரும்பிப்பார்த்து) யார் விப்ரதாஸனா ? ஏற்பாடெல்லாம் முடிவடைந்ததா ?

உத்தி:— ஸ்வாமி! எல்லாம் முடிந்தது. மைதானங்களில் பற்பல இரத்ன கூடாரங்கள் விரிக்கப்பட்டிருக்கின்றன. இந்திரபவனமும் இதற்கு இணை இல்லையென்றே சொல்லவேண்டும் மகாராணியாரும் மங்களஸ்நானம் செய்து தேவாராதனையிலிருக்கிறார்.

பூர்ண:— சந்தோஷம் இரகசியம் வெளியாகவேண்டாம். சமயம

றிந்து எங்களுக்கு சேவகனை அனுப்புங்கள். உத்திரவுபெறலாம் [உத்யோகஸ்தர் போகிறார்]

[மந்திரி போக எத்தனிக்கையில் மகாராஜன் பிரவேசம்]

உத்தான:— எனக்கு களை அதிகரித்திருக்கிறது.

பூர்ண:—இராஜனே! வேட்டை என்றால் சாமான்யமான காரியமா?

உத்தான:— மந்திரி! சிறிதுநேரம் வேட்டையாடிய பின் அதினின்றும் திரும்பமுடியவில்லையே! ஏன்?

பூர்ண:— அதற்குத்தான் வேட்டை வெறி என்பார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சன்றோ?

உத்தான:— நீயாடிய வார்த்தை வாஸ்தவம் தான். அச்சமயத்தில் ஒன்றும் தோன்றவில்லை எனக்கு இப்போது களை அதிகரிக்கிறது நாவுலருகிறது. எங்கேயாவது போய் அருந்த தீர்த்தம் கொண்டு வா?

பூர்ண:— களை அதிகரிக்கும் சமயம் தண்ணீரை அருந்தலாகாது. சற்று பொறுங்கள்

உத்தான:— சற்று பொறுத்தால் நம் நகரத்துக்கே செல்லலாமே அது என்னால் முடியாது உடனே ஜலத்தைக்கொண்டுவா.

பூர்ண:— என்ன இருண்ட இருட்டாய் இருக்கிறது, பாருங்கள் மேகங்களின் வர்ஷமோ விசேஷமாயிருக்கிறது. ஆகாயவெளிச்சமும் ஸம்பூர்ணமாய் குறைந்திருக்கிறது இப்போது. நான் எங்கே போகக்கூடும்.

உத்தான:— ஹா! மந்திரி! நான் வருந்தினால் நீயும் கூடவே அழுகிறாயே! எப்படியாவீது நீ வெளியே போய் நான உண்ண ஓர் பழத்தையும் குடிக்க கொஞ்சம் ஜலத்தையும் நீ கொண்டுவந்தால் தான் என் உயிர் நிற்கும்.

பூர்ண;— ஐயோ இதென்ன விபத்து. நான் இதுவரையில் இங்கு வந்தவனல்லன் அதோ யாரோ ஒரு வழிப்போக்கன் வருகிறான் அவனை இதைப்பற்றி கேட்கிறேன்.

[ஓர் தூதன் பந்தத்தோடு வருகிறான்.]

அடே! நீயார்! எங்கே போகிறாய்.

தூதன்:– ஸ்வாமி ! நான் மாளவராஜ குமாரியின் தூதன். இக் காட்டில் இம்மழையில் வருந்துபவர்களுக்கு அன்னபானம ளிக்க அவர்களை அழைத்துவர எனக்கு உத்திரவு ஏற்பட்டிருக்கிறது

உத்தான:— அவ்வுத்தமி எங்கே இருக்கிறாள்.

தூதன்:–இதோ சமீபத்தில் நான் அழைத்துப்போகிறேன்.

உத்தான:– பூர்ணபுத்தி ! பகவான் எங்கள் பக்கம் இருக்கிறார் போல் தோன்றுகிறது நடுக்காட்டில் வருந்தும் நமக்கு இரவில் தங்க ஓர் விடுதி ஏற்பட்டுவிட்டது பொழுது விடிந்தவுடன் நகரை நாம நாடுவோம்.

உத்தான:— அதற்கு ஆக்ஷேபணை இல்லை அவள் ராஜகுமாரி என்று சொல்வதால் விவாகமாகாதவள் என்று தோன்றுகிறதே அவளைப்போய் பார்க்கலாமோ வென்று கேட்கிறேன்.

பூர்ண:– ஐயோ ! அதைப்பற்றி இப்பொழுது என்ன யோசனை ! நாம் போவோம் என்ன மற்றொரு விவாகத்தையா தாங்கள் செய்துகொள்ளப் போகிறீர்கள் ? அப்படி ஏதாவது யோசனை உண்டோ !

உத்தான:– அவ்வளவு அழகு வாய்ந்திருந்த ராஜகுமாரியாய் அவளிருந்தால் அவளை நான் ஏன் மணமகூடாது.

[பூர்ணபுத்தி மௌனமாய் இருக்கிறான்.]

என்ன மௌனமாயிருக்கிறாய். நான் என்ன க்ஷத்திரியனல்லவா?

பூர்ண:– மகாராஜா ! நான் அதை மறுக்கமுடியுமா !

உத்தான:– பின்பு ஏன் யோசனை

பூர்ண:— அரசே ! என்னை மன்னிக்கவும் என்னை யோசனை கேட்பதால் நான் சொல்லவேண்டியிருக்கிறது. எல்லோரையும் சமமாய் பாவித்து ஸரியான ஊண் உடைகளை அளித்து அ

ந்தப்புரத்தில் வைத்து ஆனந்தித்துவந்தால் எண்ணிறைந்த ஸுந்தரிகளை வேந்தர்கள் விவாகம் செய்துகொள்ளலாம் இளையாள் வந்தவுடன் மூத்தாளை மறந்து காட்டிற்கு அனு ப்பிவிட்டால் அது தர்மமாகுமா! இப்பொழுது இந்த கும ரியை தாங்கள் மணந்தால் தனக்கு நிகரில்லை என்றிருக்கும் சுருசிக்கு சீட்டு குடுத்தாய்விடுமே என்று தான் யோசனை.

உத்தான:— ஆம்! சரிதான்! நான் செய்தது சுத்த தவறு. நாம் நகருக்குச் சென்றவுடன் நம் குதிரை மைதானத்துக்கு அ டுத்தாப்போலுள்ள அறண்மணையில் ஸுநீதியை இருக்கச் செய் கட்டாயம் உத்திரவு அனுப்பிவிடு மறவாதே!

பூர்ண:— [தனக்குள்] நம் காரியம் பாதி கைகூடிவிட்டது. பூரு வாய் முடியவேண்டும் [வெளியில்] அப்படியே செய்கிறே ன். நேறமாகிறது நாம் அந்த ராஜகுமாரியின் வீட்டுக்குப் போவோம்.

உத்தான:— அவள் அழகாயிருந்தால் விவாகத்தை முடித்துவிட வேண்டியதுதான் ஞாபகமிருக்கட்டும்.

இருவர்களும் போகிறார்கள்.

படுதா விழுகிறது.

5-வது ஸீன்.

சுநீதியின் அந்தப்புரம்.

உத்தானபாதனும் பூர்ணபுத்தியும் வருகிறார்கள்.

உத்தான:— பூர்ணபுத்தி! மிகவும் திருப்தியடைந்தேன் அவ்வு த்தமியைக் காணவிரும்புகிறேன்.

பூர்ண:— மகாராஜா! அம்மகளை நாம் பார்க்கவேண்டுவது அவ ஸ்யம் தான். நான் சொல்லி யனுப்பியிருக்கிறேன்.

சுநீதி சகியுடன் பிரவேசிக்கிறாள்.

சுநீதி:— நளினி! அம்மகாபுருஷர்கள் எங்கே?

உத்தான:- இராஜகுமாரியே! நீ செய்த மேன்மையான உபசாரத்தை நானும் என் மந்திரியும் எப்பவும் மறக்கமுடியாது. அதற்காக வெகுவாய் நாங்கள் நன்றிபாராட்டுகிறோம் இந்த சந்தர்பத்தில் எங்களுக்குச்செய்த உபசாரணையானது ஈசுவரனுக்கேச் செய்ததாய் ஆகும். மிகுந்த திருப்தியைத்தருகிறது.

சுநீதி:— ஈசுவரனை நான் நேரில் காணமுடியாது. இப்போது தாமே எனக்கு ஈசன்.

பூர்ண:— இராஜனே! பகவான் திருப்தியடைந்தார் என்பது தாம் திருப்தியடைந்ததின் மூலம் வெளியாகிறது என்று இராஜகுமாரியின் அபிப்பிராயம்.

சுநீதி:— ஆம் அப்படியே.

உத்தான:- சந்தோஷம் ஈசுவரன் குறைவற்ற சர்வ மங்களத்தையும் உனக்கு உண்டாக்குவார்.

சுநீதி:— ஈசுவரனால் ஏற்படும் எல்லா மங்களங்களும் தம்மூலமாகத்தான் ஆகவேண்டுமென்று எனது பிரார்த்தனை.

உத்தான:- பெண்ணே! நீ மெத்த படித்தவளாய் காணப்படுகிறாய். நீ யார்

[மந்திரி குறிப்பு காட்டி வெளியில் செல்கிறான்.]

சுநீதி:— நான் ஓர் ராஜகுமாரி! தம்மை எதிர்பார்த்து வந்தேன்.

உத்தான:- என்னை எதிர்பார்ப்பவளா? என்! நீ விவாஹமானவளாய் எனக்குத் தோன்றுகிறதே!

சுநீதி:— ஆம்! விவாஹமானவளே!

உத்தான:- இது ஸரியல்ல! ஸ்திரிகளுக்கு கணவனே முக்கியமான தெவம். கணவனே கதி அன்னியர்களை கண்ணெடுத்தும் பார்த்தலாகாது. [சுநீதியின் கண்களில் நீர் ததும்புகிறது.] என் அழுகின்றாய் இது என்ன விபரீதம் (தனக்குள்) பூர்ணபுத்தியும் வெளியே போய்விட்டான். இவளை கன்னிகை என்று நான் முன்னம் எண்ணியிருந்தேன். நேரில் பார்த்தபின் விவாகமானவளென்று ஏற்பட்டது அப்படி மணக்கப்பட்டவளாயின் கோஷா அன்னியில் என் எதிரில் தோன்ற

வும் ஸரஸவார்த்தைகளை ஆடவும் நியாயமில்லை. கணவனைப் பற்றிச் சொல்லுங்கால் கண்ணீரை சொரியவிடுகிறாள் காரணமோ தெரியவில்லை. (வெளியில்) அழாதே! கூசாமல் சொல் என்றால் முடிந்தவரையில் உனக்கு சகாயும் செய்கிறேன்.

சுநீதி:— (திடீரென்று இராஜன் காலடியில் விழுந்து) நாதா! என்னை காக்கவேண்டும். என்னை கைவிடலாகாது.

உத்தான:- என்ன இது விந்தையாயிருக்கிறது? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. பெண்ணே! உன்பர்த்தா யார்? இப்போது அவர் எங்கே?

சுநீதி:— ஹா! நாதா! என்னை கைவிடலாகாது சரணம் சரணம்

உத்தான:- ஆச்சர்யம். பெண்புத்தியைக் காட்டிவிட்டாய் எழுந்திரு

மோகனம் ரூபகம்.

(யதுகுலதிலகா என்ற மெட்டு)

உளக்கிது தகுமோ மாதே (உன)
மாரபாணங்களுக்கிரையாகுவது (உன)
பாமரர்போலே புத்தியடையாதே
பார்த்துசெய் காத்துசெய் தீர்த்துசெய் யோசித்து (உன)

சுநீதி:— இன்னமும் மனமிரங்கவில்லையா? நீர்தான் சரணம், என்னை கைவிடலாகாது

உத்தான:- [சற்று உற்றுப்பார்த்து] ஹா! ஸுநீதி! ஸுநீதி! என்ன இது! உன்னைக்கண்டு வெகு வருடங்களாகி விட்டதால் உன் அடையாளங்களை மறந்தேன் ஆகையால்தான் நான் இவ்வளவு பேச நேரிட்டது. இதை அறிந்துதான் பூர்ணபுத்தி வெளியே விலகினான் என்று தெரிகிறது. பாதகமில்லை இந்நகரிலேயே உன்னை அமரச்செய்ய இன்று மாலை பூர்ணபுத்தியிடம் உத்திரவு அளித்திருக்கிறேன் அவன் அவ்வாறே செய்வான்.

சுநீதி:— நாதா! தங்களை அண்டிய எனக்கு இவ்வகை உபகாரம் செய்தது தங்கள் கடமையே! மற்றொரு கடமையை இப்பொழுது தாங்கள் செலுத்தவேண்டுவது உண்டு.

உத்தான:- என்ன அது !

சுநீதி:— என் தங்கை சுருசி விட்டெறிந்த மகான்களின் அருள் பெற்ற மாங்கனியின் சிலபாகங்களை நம்பூர்ணபுத்தி எனக்கு கொணர்ந்து கொடுத்தார். அதின் குணங்களை நான் அறியாமல் அதை உட்கொண்டுவிட்டேன். பின்பு பூர்ணபுத்தியால் அறிந்து மனம்நொந்து உலகநிந்தனைக்கு பயந்து உயிரை இழக்கச் சித்தமானேன். பூர்ணபுத்தி எனக்கு அபயம் தந்து இவ்வாறெல்லாம் எற்பாடுசெய்து உலகத்தார் அறியும்படி இன்றிரவு தாங்கள் இங்கிருக்கச்செய்திருக்கிறார். சகல சாஸ்திரங்களையும் அறிந்தவரும் சதுர்முகனின் சரியான பௌத்திராயும் இருக்கும் தம் பத்தினியாயும் அநாதையாயும் இருக்கும் என்னை கைவிடலாகாது. என் மனோபீஷ்டத்தை பூர்த்திசெய்து என்னை உலக நிந்தனையிலிருந்து விடுவித்து எனக்கும் புத்ரபாக்யத்தை தந்தருளவேண்டும்.

உத்தான:— ஆச்சர்யம்! ஈசுவர ஸ்ங்கல்பம் பிரபலம் தான். சுநீதி! அஞ்சவேண்டாம். உன் இஷ்டப்படியே இன்றிரவு இருக்கிறேன்.

படுதா விழுகிறது.

முதல் அங்கம் முற்றிற்று.

இரண்டாவது அங்கம்.

1-வது ஸீன். (6)

ஸுருசியின் உத்தியானவனம்.

சுருசி:— எவ்வளவு யோசித்தும் காரணம் புலப்படவில்லை. இதுவரையில் அவர் எங்கும் நின்றவரல்லர். வழிதப்பிருப்பார் என்றாலோ வேட்டை நாய்களில் ஒன்றும் திரும்பி வரவில்லை அரண்மனை ஜோஸ்யரும் சுபமென்றே தான் இன்று பஞ்சாங்கம் ஓதினர். பூர்ணபுத்தியின் உபத்திரவம் எப்பொழுதும் எல்லோருக்கும் உண்டு அவன்தான் இவரை வேட்டையாட தூண்டியது. சற்று யோசித்தால் இவர் வேட்டைக்கு

சென்றகாடு சுநீதியின் வீடுதிக்கு சமீபமாயுள்ளது சுநீதிக்கு பூர்ணபுத்தியால் ஆதாணை நடந்துவருவதாய் நான் பலரால் கேட்டிருக்கிறேன். ஒருவேளை அவனே ஏதாவது ஏற்பாட்டை செய்து மகாராஜாவை சுநீதியின் மாயவலையில் சிக்க வைத்திருப்பானோ! அதையும் சொல்லமுடியாது! பொழுதுவிடிந்து 2-நாழிகையும் ஆகிவிட்டது. இனி ஏதாவது ஒன்று வெளியாகத்தான் வேணும்.

[ஓர் சேடி ஓடிவருகிறாள்.]

சேடி:— ராணிசாகேப்! கேட்டீர்களா செய்தியை! நேற்றிரவு மகாராஜா சுநீதியம்மாள் வீட்டிலிருந்தார்களாம். ஊரில் எங்கு பார்த்தாலும் இதே பிரஸ்தாபமாயிருக்கிறது. இதுமாத்திரமல்ல இனி அவள் நம்ம குதிரை மைதான அரண்மனையிலேயே இருக்கப்போகிறாளாம். சேவகர்கள் அதை காலி செய்து வருகிறார்கள். இந்த அநியாயம் அடுக்குமா! ஐயோ! நான் போகிறேனம்மா! மகாராஜாவே வந்துவிட்டார். (சேடி போகிறாள்)

சுருசி:— வரட்டும் வரட்டும் நீ போ இந்த சுருசியை தன்னை காத்துக்கொள்ள முடியாதவள் என் சாமார்த்தியத்தைக் காட்டுகிறேன்

உத்தானபாதன் வருகிறான் சுருசி மௌனமாயிருக்கிறாள்

உத்தான:— கண்ணே! என்ன ஒருமாதிரியாய் நிற்கிறாய்

சுருசி:— போதும் கண்ணே என்றும் மூக்கே என்றும் ஏமாற்றினதெல்லாம் போதும் நான் ஒரு தினுசாக நிற்கின்றேனும் உள்ளே உள்ளது தானாகவே வெளியாகிறது

உத்தானே:— மாதரசே! என்ன உள்ளே இருக்கிறது ஒன்றுமில்லையே! வேட்டையிலிருந்து நேராகவே இவ்விடம் வருகிறேன்

சுருசி:— நேராக இவ்விடம் ஏன் வரவேண்டும் பிரியமுள்ளவள் எப்பொழுதும் காத்திருக்கிறாளே! நாடுநகைக்க ஊர்சிரிக்க என் பெருமை எல்லாம் பாழாய்ப்போச்சு இனி என்ன பேச்சு

உத்தா:- கோபிக்காதே ! நான் வேட்டைக்கு புறப்படும்பொழுது இப்படி எல்லாம் ஆகுமென்று நான் எண்ணவே இல்லை ஏதோ அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது இனி என்னைப்பற்றி கொஞ்சமேனும் சந்தேகிக்காதே

சுருசி:— உங்கள் வார்த்தையில் எனக்கு இனி கொஞ்சமேனும் நம்பிக்கை இல்லை

உத்தா:- அப்படி நீ நினைப்பது தவறு உனக்கு நம்பிக்கைவரும்படி நான நடந்துகொள்வேன்

சுருசி:- அப்படியானால் என் எண்ணத்தின்படியே நீங்கள் நடக்கிறீர்களா ?

உத்தான:- ஹா! காந்தே ! ஏன் இதில் உனக்கு சந்தேகம். சந்தேகமே வேண்டாம்.

சுருசி:- என் மனதின்படியே தாம் காரியம் செய்வீர், சந்தேகமில்லை.

உத்தான:- ஆம் சந்தேகமே இல்லை கண்ணே!

சுருசி:- நான் கேட்பதை தருகிறீரா ?

உத்தான:- நீ கேட்கவேண்டுவதும் ஒன்று உண்டா ! நான் எல்லாவற்றையும் தந்தே இருக்கிறேன். எதை வேண்டினாலும் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்.

சுருசி:- இது சத்தியம் தானா.

உத்தான:- என் முன்னோர்களறிய இது சத்தியம் தான்.

சுருசி:- நேற்று வேட்டைக்குத் தாம் போயிருக்க சமயம் சுநீதியுடனிருந்து வந்ததாலும் மகான்களின் கனியும் அவளுக்குப் போய்ச் சேர்ந்திருப்பதாலும் என்னைப்போல் அவளுக்கு ஓர் புதல்வன் பிறக்கப்போகிறது உண்மையே ! ஆதலால் என் வயிற்றில் பிறந்த பிள்ளைக்கே தாங்கள் முடிசூட்டவேண்டும். எக்காரணத்தைப் பற்றியும் அவளுடைய மகனுக்கு இராஜ்யம் போகக்கூடாது. இதுதான் எனக்குத்தரவேண்டியவரான். இனிசத்தியத்தினின்றும் தவரவேண்டாம் தாரும். (கையை நீட்டுகிறாள்)

உத்—(யோசித்து) அப்படியே தந்தேன் (சத்தியம் செய்கிறான்) திருப்திதானே! அரண்மனைக்குச்செல்லோம் இருவர்களும் போகிறார்கள்.

படுதா விழுகிறது.

2 வது சீன்.

ஓர் வீதி

நலினீ வருகிறாள்.

நலினீ :— (தனக்குள்) நான் இந்த ஆறுவருஷகாலமாய் சுநீதி பாய் சாகேப்பிடம் வேலைசெய்துவருகிறேன், அவரை ஒரு நிமிஷமும் நான்விட்டும்பிரிவதில்லை வேலைகளையும் செய்து வருகிறேன், சும்மா சொல்லக்கூடாது, நமக்கு கண்கால் இருக்கவேண்டாமா, நம்ம பாய்சாகேப்பை கோவிலில்வைத்து நமஸ்காரம் பத்துபிரதக்ஷிணம் பண்ணலாம் போலிருக்கிறது, யாருடைய புண்யமோ யாருடைய ஆசீர்வாதமோ ஒரு குழந்தை இப்பொழுது பிறந்திருக்கிறதே! அம்மா! அது தங்கவிக்ரஹம் போலவா இருக்கும், அதுவும் என் பாக்கியம்தான், இப்பொழுது அவனை அழைத்துவர எனக்கு உத்திரவாகி இருக்கிறது, அவன் இப்பொழுது விளையாடிக்கொண்டிருப்பான், உடனே நான் அவனைக்கூப்பிடப் போகிறதில்லை, நான் சற்றுதூரம் நின்று அவனுடைய விளையாட்டைப்பார்க்கிறேன், அதின் அழகு ஒன்றேபோதும், இவைகளைப்பார்க்கக் கொடுத்துவைத்த என்பாக்யமே பாக்கியம். (போக எத்தனிக்கிறாள்)

(ஓர் குரல்) என் பாக்கியமே பாக்கியம், (விதூஷகன் வருகிறான்)

நலினி :— விதூஷகரே' எங்கே சவாரி!

விதூ;- சவாரி இனிமேல் எங்கே போகும், நின்றேவிட்டது. (நிற்கிறான்)

நலினி:- (புன்னகையுடன்) சௌக்யமா!

விது:— இதுவரையில் அசௌக்கியம் இனி சௌக்கியமே

நலினி:— (சிறிப்பு) உங்களைப்பார்த்து சொர்ப நாளாயிற்று,

விது:— ஆமாம், ரொம்பநாளாயிற்று, போனஜன்மத்தில் நாம் ஒருவருக்கு ஒருவர் பார்த்துக்கொண்டது,

நலினி:— போனஜன்மத்திலா! அது என்ன

விது:— என்னவா! உனக்குத்தெரியாதோ, இதுவறையில் நானுன்னைப்பார்காததால் என் உயிர் போயிருந்தது, உன்னைக்கண்டவுடன் மறுபடியும் பிறந்தது, ஆதலால் உயிர் ஒருதடவை போய் மறுபடியும் திரும்பினுல் ஜன்மம் வேறல்லவா, நீயே சொல்,

நலினி:— எல்லாம் தங்கள் விசுவாஸம்.

விது:— இருக்கட்டும், நீ எங்கே தனியாய் புறப்பட்டாய்,

நலினி:— எனக்கென்ன குறை! பேரானந்தைத் தரும் துருவனுடைய முகத்தைப் பார்த்தாலேயே எல்லா துக்கங்களும் தீரும் அதுதான் எனக்கு பெருந்த சுகம்

விது:— அதைக்காட்டிலும் எனக்கு ஒரு பெருத்த ஸுகமுண்டு அது யாது தெரியுமா! இருக்கிறதை இல்லாததாய்ச் செய்கிறது இருப்பதை இல்லாததாய் மறைக்கிறது ஓரே வாய் பந்தல் இதுதான்

நலினி:— சரி உங்களுக்கு ரொம்ப நேரமாகிறது

விது:— சரி எனக்கு உத்திரவுபோ லிருக்கிறது நான் போய்விடுகிறேன் ஆனல் முன்னே நான் சொன்ன சங்கதியை மறந்து விட்டாய் போலிருக்கிறது தயவுசெய்யவேண்டும் ஏதோ பிருமமணன் வித்வான்

நலினி:— யார் வித்வான்! நீங்களா! நான் கேள்வி கேட்கலாமா!

விது:— கேள்வியா! யாருக்கு எனக்கா! வித்வானை கேட்கலாமோ! சுத்தபிசகு! கேட்ட கேள்விக்கு பதில் வருது கோபம் வந்துவிடும் பின்பு உன் தைரியம்

நலினி:— பாதகமில்லை சாதிஎவ்வளவு

விது:- எனக்கு இப்பொழுது ஞாபகத்திலிருப்பது ஜாதி ஒன்றே தான் அதாவது பெண் ஜாதி

நலினி:- ஆ! வாரம் எத்தனை!

விது:- தெரியாதோ! வாரம் மூன்று தான் தாழ்வாரம் மேல்வாரம் அஸ்திவாரம்

நலினி:- ஆ! இதெல்லாம் எங்கே இருக்கிறது. எவ்வளவு சாஸ்திரங்களை நீங்கள் படித்திருக்கிறீர்கள்

விது:- நான்கு சாஸ்திரங்களையும் நான் படித்திருக்கிறேன்.

நலினி:- நாலு சாஸ்திரங்களையுமா! படித்ததிருக்கட்டும் முதவில் அவைகளின் பெயரைச் சொல்லும்

விது:- (எண்ணிக்கொண்டு) கள்வக்கிரட்டு 1 மன்மதநெறிவிளக்கம் 2 குடிப்பிரந்தம் 3 அசத்திய சிந்தாமணி 4 இந்த நாலாவது சாஸ்திரத்தில் தான் எனக்கு நிரம்ப பிரஸித்தி ஆதலால் என் மீது நீ தயவு செய்யவேண்டும் நான் பிராம்மணன் பிரம்மபுத்திரன்

நலினி:- நான் யார் தெரியுமா! ஸரஸ்வதி!

விது:- நீ ஸரஸ்வதி எப்படி! நலினி தானே!

நலினி:- நீர் பிறம்மபுத்திரர் எப்படி! சம்மோதகர் தானே!

விது:- இருக்கட்டும் (யோசித்து) ஸரஸ்வதியா!

நலினி:- ஸரஸ்வதிக்கும் பிரம்மாவுக்கும் என்ன சொந்தம்

விது:- ஸரஸ்வதி 5 எழுத்து பிரம்மா 4 எழுத்து. ஸரஸ்வதி பெரியவள் பிரம்மாவுக்கு அக்காள் அல்லது தாயார் முறையாகவேண்டும்

நலினி:- நீர் வாசித்த அழகு போதும் பிரம்மாவுக்கு ஸரஸ்வதி அப்படியல்ல நான் தான் உங்களுக்கு அந்த முறையாகவேண்டும் உங்களோடு வாதாட எனக்கு நேரமில்லை நான் போகிறேன் [போகிறாள்]

விது:- ஐயோ! மோசமோ! எனக்கு போக தெரியாதோ நானும் போகிறேன் (போகிறான்)

படுதா விழுகிறது

3-வது சீன்.

ஸுநீதியின் அந்தப்புரம்.

சுநீதி:—ஈசுவரனிருப்பது உண்மை. வேதம் உண்மை. சாஸ்திரம் உண்மை. இவைகளில் சொல்லும் எல்லா விஷயங்களும் உண்மையே. தற்கொலை மிகவும் கொடுமை. சுகமோ துக்கமோ லாபமோ நஷ்டமோ ஜயமோ பராஜயமோ எதுநேர்ந்தாலும் எல்லாம் ஈசன்செயல் என்று நினைத்து கஷ்டம் நேரிட்டசமயம் பொறுமையைப்பெற்று தைரியத்துடன் நின்றால் சுகம் முன் நிற்கும் என்பது நிச்சயம். பூர்ணபுத்தி சொன்ன புத்திமதியைக்கேளாமல் நான் முன்னால் உயிரைவிட்டிருந்தால் இவ்வகை சுகம் எனக்கு ஏற்படுமா! என்ன அழகு! என்ன ஆட்டம்! என்ன புத்தி!

திருப்புகழ்.

(இசைந்த யேறும் என்ற மெட்டு.)

அடக்கியாளும் அரிமாதவனின் அருளேதான் நான்
அடைந்ததான அற்புதமாயுள்ள அரும்பாலன் (1)
மலர்ந்தகண்கள் மதிமுகமண்டலம் வெகுநேர்த்தி
மகிழ்ந்துநிற்கும் மகிமைதங்கிய சிறுமூர்த்தி (2)
சிறந்ததேகம் சிறுசிறுஅங்கங்கள் பெறும்சீறு
சிந்தனைஎல்லாம் சிதறிப்போகுது பலவாறு (3)

துருவனைப் பார்த்தால் ஈசனின் அருளே இந்தவடிவாய் வந்திருக்கிறதோவென நினைக்கவேண்டியிருக்கிறது. என் கண்மணியை மகாராஜாமட்டில் பார்ப்பதில்லையே என்று எனக்கு வருத்தமுண்டு. நான் என்ன செய்யக்கூடும். பாராமல் அவர் எப்படி இருக்கக்கூடும். தினந்தோறும் துருவன் உத்தமனோடு தான் விளையாடிவருகிறான். ஏதோ அவளுக்குப் பயந்து அவனிடம் மகாராஜா விசுவாசம் காட்டாமலிருக்கலாம். அந்தரங்கமில்லாமலிருக்குமா! (திரும்பிப்பார்த்து) ஆ! என் கண்மணி இதற்குள் ஏன் திரும்பிவிட்டான். இப்போதுதானே அவன் விளையாடப்போனான். வரட்டும்.

துருவன்:—(உள்ளுக்குள்) அம்மா!

சுநீதி:—அப்பா வாடா! குலமணி வாடா!

காம்போதி ஆதி.

(வீறன் இநளன் என்ற வர்ணமேட்டு நடை.)

வாடாவாடா கண்மணியே
வாவாமகனே என் துரையே. (வாடா)
வந்ததுக்கத்தை தீர்த்தவனே
எந்தன்மானம் காத்தவனே
சந்திரமுகனே சுந்தரசொரூபனே
இந்திரபதமாளும் கந்தமலர்ப்பாத (வாடா)

[துருவன் பிரவேசிக்கிருன். சுநீதி உயர எடுத்து முத்தமிடுகிருள்.]

கண்மணி! எனிதற்குள் திரும்பிவிட்டாய். இப்போதுதானே விளையாடப்போனுய்! உடம்பு ஒன்றுமில்லையே!

துருவ:—அதெல்லாம் இல்லையம்மா!

சுநீதி:—அப்படியானல்

துருவ:—என் அப்பா யார் சொல்லு.

[சுநீதியின் முகக்குறி மாறுகிறது.]

சுநீதி:—துருவா! என்ன!

துருவ:—என் அப்பா யாரம்மா!

சுநீதி:—(தனக்குள்) ஆ! இதுவரையில் இவன் இப்படிக் கேட்டதில்லையே! அப்பா எங்கே என்று கேட்டுக்கொண்டிருந்தான். இருக்கட்டும். வழக்கப்படி வார்த்தையைமாற்றி அனுப்பிவிடுகிறேன். (வெளியில்) இன்றைக்கும் எல்லோரும் விளையாட வந்திருக்கிருர்களோ.

துருவ:—எல்லோரும் வந்திருக்கிருர்கள் அம்மா! உத்தமனும் வந்திருக்கிருன். சுதர்மனுக்கு ஜொரமாம். அவன்தான் வரவில்லை.

சுநீதி:—ஜொரமா! இந்தக்காலத்தில் அது ரொம்ப பயத்தைத் தருகிறதடா!

துருவ.—(கைகூப்பி) சுவாமிதான் அவனைக் காப்பாற்றவேண்டும்.

சுநீதி:—நீ பயப்படாதே! நாளைக்கு ஜொரம் ஸ்வஸ்தமாய்ப் போகும். மறுநாளே விளையாடவருவான் உன்னோடே. (கன்னத்தைத் தொடுகிருள்.)

துருவ:—சரிதான் அம்மா! அப்பா யார் சொல்லு.

சுநீதி:—(தயங்கி) துருவா! போனவுடனே என்ன ஆட்டம் விளையாடினுய்! கோலியா!

துருவ:—ஆமாம் (கோலியை சட்டைப்பையிலிருந்து எடுத்துக் காண்பிக்கிருன்.)

சுநீதி:—நான் கொடுத்த கோலிதானே.

துருவ:—ஆமாம்மா! அதுதான்.

சுநீதி:—உன் கைபட்டதால் அதற்கு என்ன பளபளப்பு வந்திருக்கிறது, உம். (முத்தமிடுகிருள்.)

துருவ:—நான் போகிறேனம்மா! விளையாடவேண்டும். என் அப்பா யார் சொல்லு.

சுநீதி:—சொல்லுகிறேன். கண்ணே! போய்வா! பின்பு சொல்லுகிறேன்.

துருவ:—இப்பவே சொல்லு அம்மா!

சுநீதி:—பிறகு சொல்லுகிறேனென்றேனே! போய்வா!

துருவ:—இப்பொழுதே சொல்லு. இல்லாமல்போனல் நான் போகவேமாட்டேன்.

சுநீதி:—அது ஏனடா இப்போ.

துருவ:—(துக்கத்துடன்) பையன்களெல்லாம் என்னைக் கேலிபண்ணுகிருர்கள். அப்பா என்னையும் உன்னையும் வீட்டைவிட்டு துரத்திவிட்டாராம், நாங்கள் ரொம்ப ஏழையாம். இப்படி எல்லாம் கன்ன பின்ன என்று என்னன்னமோ சொல்லுகிருர்கள்.

சுநீதி:—அப்படி எல்லாம் யாரடா சொல்லுகிறது. அது பொய் என்று சொல்லு. போ.

துருவ:—என் அப்பாதான் யார் சொல்லேன். அவர் இப்போ எங்கே! ஏன் இப்படி சும்மா தயங்கி தயங்கி பேசுகிருய். சத்தியமாய்ச் சொல்லு.

சுநீதி:—(தனக்குள்) நான் எவ்வளவு மறைத்தும் குழந்தை அதனை அறிந்துகொள்ள அடம் பிடித்திருக்கிறுன். எந்தப் பாவியோ என்னமோ சொல்லி கொளுத்திவைத்திருக்கிருன். நான் இனி என்ன செய்யலாம். சொல்லித்தான் தீருகிறேன். (வெளியில்) சொல்லத்தான் வேண்டுமோ.

துருவ:—சொல்லு அம்மா!

(கோஜல் ஸபகாருண என்ற பார்ஸி மெட்டு.)

என்னைப் பெற்றெடுத்த தாயே
என் தந்தை யாரென்று உரைப்பாயே.
எனுமக்குச்சொல்ல மனமில்லை
வந்துவிட்டது தொல்லை
நேசர்களேச வேசிகள்பேச (என்னை)

சுநீதி:— துஷ்ட வேசி என்று நினைத்தாய் நான்
ஜேஷ்ட ராணி யாவேன் குழந்தாய்
இந்நாட்டு மன்னனே தந்தை
உனைவிட்டதே விந்தை
உலகநிந்தை விளைந்தசிந்தை (துஷ்ட)

துருவா! இவ்வூரை ஆண்டுவரும் மகாராஜாதான் உன் தகப்பனார்.

துருவ:—போ அம்மா! பொய் சொல்லுகிறாய். உத்தமனுக்குத்தான் அவர் தகப்பனார்.

சுநீதி:—ஆம். உனக்கும் அவர் தகப்பனார். உத்தமனுக்கும் அவர் தகப்பனார்.

துருவ:—ஆ! ஆ! உத்தமன் எனக்குச் சொந்தம்.

சுநீதி:—ஆமாம். உத்தமன் உனக்குத் தம்பியாகவேண்டும்.

துருவ:—தம்பியா. பேஷ். நானும் அரண்மனைக்கு போகலாம். என்னம்மா.

சுநீதி:—சரிதான். அதற்காகத்தான் நான் சொல்லமுடியாதென்றேன். நீ அங்கே போகவே கூடாது.

துருவ:—என் போகக்கூடாது.

சுநீதி:—அங்கே போனால் கத்தி துப்பாக்கிகளை ஏந்திக்கொண்டு முறட்டு சிப்பாய்கள் நிற்கிறார்கள். உனக்கு ஏதாவது தீங்கு செய்வார்கள். போகாதே கண்மணி!

துருவ:—கத்திதுப்பாக்கிகளைப் பார்த்தால் எனக்கு பயமோ! அவர்கள் என்னைப்பார்த்து சிரிக்கிறார்கள். பக்ஷமாய் பேசுகிறார்கள். கிட்டே வாவென்றழைக்கிறார்கள். எனக்கு பயமே இல்லை.

சுநீதி:—துருவா! நீ அங்கேபோய் உனக்கு ஆகவேண்டியதென்ன. நீ என் போகவேண்டும்.

துருவ:—என் அப்பா அங்கே இருக்கிறார். நான் போகிறேன். உனக்கென்ன வருத்தம் அம்மா.

சுநீதி:—நான் சொல்வதைக் கேள். இப்போ அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.

துருவ:—இப்போ நான் அங்கே போகிறதில்லை. விளையாடப்போகிறேனம்மா! எனக்கு நேரமாயிற்று, போகட்டுமா.

சுநீதி:—போய் சீக்கிரமே வா! நீ அங்கே போகாதே!

[துருவன் குதித்துப்போகிறான்.]

இதுவரையில் நான் ஒன்றையும் வெளியிடாமலிருந்தேன் இராஜனும் ஒருவாறு மனம் திடஞ்செய்து காட்டிலிருந்த என்னை நாட்டிலேயே தன் அரண்மனைக்குள் அமர்த்தினார். இனி துருவனும் அரண்மனைக்குள் போக்குவரவு வைத்துக்கொண்டால் நான் என்ன செய்வேன். அறியாக் குழந்தைக்கு என்ன பதிலை சொல்லி நான் அடக்குகிறது. ஈசுவரன்தான் எனக்குத் துணை. பார்த்துக்கொள்வோம்.

[சுநீதி போகிறாள். படுதா விழுகிறது.]

4-வது சீன்.

சுருசியின் அந்தப்புரம்.

(சுருசி உத்தமனை சீராட்டுகிறாள்.)

சுருசி:—உத்தமா! சாப்பிட்டாச்சோ! வயிறு வாடுகிறதே!

உத்தம:—சாப்பிட்டாச்சே!

சுருசி:—நன்றாய் சாப்பிட்டாயோ! நடுவில் எழுந்து ஓடிப்போனாயோ?

உத்தம:—இல்லையம்மா.

(உள்ளே) இல்லை, நன்றாய் சாப்பிட்டான்.

[விதூஷகன் வருகிறான்.]

சுருசி:—அப்படியானால் ஏன் வயிறு வாடுகிறது.

விதூஷ:—ஒவ்வொருவருடைய இயற்கை அப்படியிருக்கும். சிலபேர் எவ்வளவு சாப்பிட்டாலும் சாப்பிட்டதாகத் தோன்றுகிறதில்லை. என்னைப்போலொத்தவர்கள் சாப்பிடாமலிருந்தாலும் வயிற்றைப் பார்த்துவிட்டு சாப்பிட்டதாக எண்ணும்படி நேரிடுகிறது.

சுருசி:—(உத்தமனைப் பார்த்து) என்ன என்ன சாப்பிட்டாய் கண்ணே! சொல்லு.

உத்தம:—எனக்கு பெயர் தெரியாதம்மா! என்னன்னமோ சாப்பிட்டேன்.

விதூஷ:—பெயரில்லாததையா சாப்பிட்டாய். நான் அவைகளைச் சொல்லுகிறேன். அப்படியே சொல் பார்ப்போம்.

சுருசி:—சொல்லடா சொல்லு.

விதூஷ:—பூந்தி.

உத்தம:—பூந்தி.

விதூஷ:—லட்டு.

உத்தம:—லட்டு.

விதூஷ:—ஜிலேபி.

உத்தம:—ஜிலேபி.

விதூஷ:—பதர்பேணி.

உத்தம:—நகர்கேணி.

விதூஷ:—பாழ்கேணி! கேணியல்லடா! பேணி.

உத்தம:—நகர்பேணி.

விதூஷ:—நகர் அல்லடா பதர்.

உத்தம:—பதர்கேணி.

விதூஷ:—எதுசரியோ அதுமாத்திரம் வருகிறதில்லை. பதர்கேணியல்லடா பதர்பேணி.

உத்தம:—அம்மா எனக்கு படிப்புவேண்டாமம்மா. உபத்திரவம்.

சுருசி:—படிப்புவேண்டாமப்பா கண்ணே! உனக்கு படிப்பு ஏன். சம்மோதகா! சும்மா இரு.

விதூஷ:—தேவி! இவனுக்கு படிப்பு ஏன். இவன் என்ன படித்து சம்பாதிக்க வேண்டுமா. அரண்மனை இருக்கவே இருக்கிறது. சீக்கிரத்திலே ஒரு கல்யாணத்துக்குமாத்திரம் ஏற்பாடு செய்துவிடலாம். அதுபோதும். (தனக்குள்) இட்டா. சாப்பாடோடே சரி. என் முத்தண்ணு.

சுருசி:—ஆம் சம்மோதகா! இவனழகைப் பார்த்தாயா!

விதூஷ:—சந்தேகமென்ன, வழிந்து ஓடுகிறது.

[இராஜன் வருகிறான்.]

உத்தான:-(உத்தமனின் கன்னத்தைத்தொட்டு) என்னடா என்ன

சுருசி:-இன்று சம்மோதகன் பாடம் சொல்லிக்கொடுத்தான். என்ன அழகாய்ச் சொன்னுன். தெரியுமா.

உத்தான:-பேஷ் (விதூஷகனின் முகத்தைப் பார்க்கிறுன்.)

விதூஷ:-அழ அஅகாச்சொன்னுன்.

உத்தான:-உத்தமா! என்ன பாடமடா! அதைச்சொல்.

உத்தம:-என்னமோ! போ!

விதூஷ:-அதெல்லாம் சுலபமாய்ச் சொல்லமுடியுமா! சின்னப்பயல் தானே (தனக்குள்) பக்ஷணமானுல் அடுக்கு கணக்காய் உள்ளே அருவடையும். பக்ஷணம் பக்ஷணம் என்று அடிக்கடி சொல்லி வருவதால் எனக்கு அதின் ஞாபகம் வந்துவிட்டது. நான் சமையலறையைப் பார்க்க பேர்ச்சேருகிறேன்.

[விதூஷகன் போகிறுன்.]

உத்தான:-கெட்டிக்காரப் பயல். இனிமேல் நீ பேசக் கற்றுக் கொள்ளவேண்டும்.

உத்தம:-எனக்குப் பேசத்தெரியாதோ! இனிமேல்தான் நான் கத்துக்கொள்ளவேண்டுமோ!

சுருசி:-என் செல்வமே! என்னபேச்சு பேசுகிறுயடா! நீ பேச வேண்டாமடா! திருஷ்டிப்பட்டுப்போகும். (முத்தமிட்டு) யாரைப்போல் இவனிருக்கிறுன் சொல்லுங்கள்.

உத்தான:-(புன்னகையுடன்) யாரைப்போலிருப்பான். உன்னைப் போலத்தான்.

சுருசி:-(சிங்காசனத்தைக் காட்டி) அங்கேபோய் உட்காருவோம். வாருங்கள். (சமீபம் போகிறுர்கள்.)

[துருவன் பிரவேசம். நலினீ அவனை அடக்கிப்பிடித்தல்]

உத்தான:-(ஆஸனத்தைக் காட்டி] காந்தே! நீ உட்காரு.

சுருசி:-வேண்டாம். நீங்கள் உட்காருங்கள்.

உத்தான:-நீயும் நானும் சேர்ந்து உட்காருவோம்.

சுருசி:-குழந்தையை தங்களிடம் கொடுக்கிறேன். நான் தூர நின்று அதின் அழகைப் பார்க்கிறேன்.

உத்தான:-ஆ! அப்படியா! உட்காருகிறேன்.

[இராஜன் உட்காருகிறுன். மடியில் உத்தமனை சுருசி உட்காரவைக்கிறுள். துருவன் சமீபம் போக எத்தனிக்கிறுன். நலினீ அடக்குகிறுள்.]

சுருசி:—(சற்று தூரநின்று) இப்பொழுது என் செல்வம் யாரைப் போலிருக்கிறது. சொல்லுங்கள்.

உத்தான:—(புன்னகையுடன்) உன்னைப்போலத்தான்.

சுருசி:—ஹாஸ்யமா செய்கிறீர்கள். இல்லவே இல்லை.

உத்தான:—நீ சொல். யாரைப்போல்.

சுருசி.—உங்களைப்போலத்தான்.

உத்தான:—உன்னிடமிருந்தால் உன்போலவும் என்னிடமிருந்தால் என்போலவும் அவனிருக்கிறான் என்று தோன்றுகிறது.

சுருசி:—ஆமாம். ஆமாம். (ஓடிவந்து முத்தமிடுகிறாள்)

[நலினீயின் கையை உதறி துருவன் மகாராஜன் சமீபம் வருகிறான். துருவனைக்கண்டு பிரமித்து அவனுடைய கையை பிடித்திழுத்து.]

அடே! பயலே! இங்கே ஏன் வந்தாய் போ!

[தள்ளுகிறாள். துருவன் மறுபடியும் சமீபத்தில் போகிறான். சுருசி அவனை பிடித்து இழுத்து அதட்டிக்கொண்டு]

போ என்கிறேன்! மறுபடியும் முன்னே போகிறாயா! ராஜா மடியிலா உட்கார பார்க்கிறாய். மூடப்பயலே! துடப்பக்கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் வேறே! கேடுகெட்ட அநாதை! மறுபடியும் போகிறாயா!

காவடிச்சிந்து.

(ஆறுமுக வடிவேலவனே என்ற மெட்டு.)

எத்தனை சொல்லியும் போகாமல் நிற்கிறாய் உட்காரவோ மூடா
ஏதுக்கு இந்தெண்ணம் எப்பவும் நடவாது விரைவாக போ போடா.

துருவ:—உத்தமன் மாத்திரம் உட்கார்ந்து இருப்பதும் நியாயமோ மாதா
பித்தமது என்னை வேண்டாமென்றுரைப்பது ஏனோ
[பெரும்சூதா.

உத்தமன் மாத்திரம் உட்கார்ந்திருக்கிறானே!

சுருசி:—உத்தமன்மாத்திரமா! (ஓடிவந்து கன்னத்தில் அறைந்து) கண்ணைவைத்து கரைக்கிறது! பார்! பிசாசு. பவுசுகெட்ட மூதேவி வயிற்றில் பிறந்தவனே! உத்தமன் என்பிள்ளையடா!

(தெம்மாங்கு மெட்டு.)

பிள்ளையடா எந்தன் உத்தமன் தானவன்
இல்லா வம்புகளை செய்யாதே (பிள்ளை)

துருவ:—பிள்ளையே நானுமக்கு (இல்லையா) என்னப்பா தானுன்கணவன்
பேத புத்திதனைக் கொள்ளாதே (பிள்)

தாயே! நானும் உங்கள் பிள்ளையல்லவா! என் தந்தையே உங்களுக்கும் பதியாகையால் நானும் உங்கள் பிள்ளையல்லவா!

சுருசி:—அடே வாயாடி! வேதாந்தமா இங்கு பேசுகிறாய்! அந்த வகை சொந்தம் வேண்டாம். உத்தமன் என் வயிற்றில் பிறக்கும் பாக்கியத்தைப் பெற்றான். நிர்பாக்யையான அப்பாவியின் வயிற்றில் உதித்ததால் இந்த சிம்ஹாசனத்தைப் பார்க்கவும் நீ அருகனல்ல. போகிறாயா இல்லையா. (தள்ளுகிறாள்.)

துருவ:—உன் வயிற்றில் பிறக்காததால் எனக்கு மகாராஜாவின் மடி இல்லையோ?

சுருசி:—இல்லவே இல்லை. அற்பச்சிறுக்கியின் வயிற்றில் பிறந்த பிள்ளைக்கு என்ன வாய்த்துடுக்கு. கிடையாது.

துருவ:—நான் என் அப்பாவைக் கேட்கிறேன். நீ சும்மா இரு. அப்பா! நான் வந்து உட்காரட்டுமா!

(சமீபத்தில் போகிறான். ராஜன் மௌனமாய் இருக்கிறான். சுருசி துருவனை தலையிலடித்து)

சுருசி:—உன்னை உள்ளே விட்டதே பிசகு. உன்னப்பா பேசிவிடுவாரோ! அப்பாவாம். உன் புண்யாகவாசனத்திற்கு என்ன மணைமீது உட்கார்ந்தாரோ! தாஸிமகனே! என்னபேச்சுடா!

(இரண்டு கன்னங்களையும் கிள்ளி அடித்து அதட்டுகிறாள். துருவன் அழுகிறான்.)

மூடவன் கொம்புதேனுக்கு ஆசைப்படுகிற கதையாய் இருக்கிறதே! குருடன் ராஜவிழி விழிக்கமுடியும்போலிருக்கிறது. இங்கே நின்று அழுகிறான். சிங்காசனம் கிடைத்துவிடுமோ!

அடாணா ரூபகம்.

அழுதுவந்தால் அகப்படுமோ
அரசனுடைய ஆசனபதம் (அழு)
அநாதைதாவி பெற்றதிரேகம்
அகன்றபின் தானுனக்குயோகம்
அரியைநம்பிபோவாய்கானகம்
அரியதவமேகொடுக்கும்போகம் (அழு)

(இருகரங்களையும் பிடித்துக்கொண்டு) இதோ என் வார்த்தையைக் கேள். நேராய்க் காட்டுக்குப்போ! பகவானை நினைத்து கடுந்தவம் செய். பகவான் பிரத்யக்ஷமாகுவார். என்ன வேண்டுமென்று கேட்பார். நான் சுருசி வயிற்றில் பிறக்கவேண்டுமென்று கேள். அப்படியே அவர் வரம் தருவார். தாஸி மகனாய் பிறந்த இந்த தேகத்தை தொலைத்துவிடு. பின்பு தானாக உனக்கு இந்த சிம்ஹாசனம் கிடைக்கும். போ.

துருவ:—(கண்ணை கசக்கிக்கொண்டு) ஏனப்பா! சரிதானா! இது! இது உனக்கு சம்மதமா!

(துருவனுடைய கழுத்தைப்பிடித்து தள்ளிக்கொண்டு)

சுருசி:—அடே! மூர்க்கா! அப்பாவாம்! சொல்லாதே என்று சொன்னேன். மறுபடியும் கேட்கிறாயா? சொந்தமா கொண்டாடுகிறாய்? அடங்காப்பிடாரி. தாஸி மகன். போ! போ! வெளியில்.

துருவ:—(அழுதுகொண்டு) என்னம்மாவா தாஸி.

பிலஹரி ஆதி.

இந்த இடம் வேண்டா மம்மணி (இந்த)

சுந்தர பதமொன்றைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறேன்

அந்தரங்கமில்லாமலே அன்னைதாஸி என்று சொன்னாய்

தந்தையும் தாஸனாவார் தாஸியாவாய் நீயும்நீஸி

எந்தஜீவனும் தாஸன் வைகுந்தவாஸன் நாதன்

இந்திராதி தேவர்சூழும் ஆநந்தபத மேற (இந்த)

அவளும் தாஸி. நீயும் தாஸி. அப்பாவும் தாஸன். எல்லோருக்கும் நாதன் ஒருவனிருக்கிறான். போய் அவனைச் சேருகிறேன்.

(துருவன் திடீரென்று வெளியில் போய்விடுகிறான். உத்தமனை உடனே இறக்கிவிட்டு ராஜா பிரமிக்கிறான்.)

சுருசி:—என்ன ஆச்சர்யம். எங்களுடைய மானத்தைப் போக்கிவிட்டானே! போச்சு போச்சு நம்ம மானம்!

படுதா உடனே விழுகிறது.

4-வது சீன்.

துருவன் அழுதுகொண்டு வருகிறான்.
ஸுநீதி கைபிடித்து அழைத்து வருகிறாள்.

சுநீதி:—(பிரமித்து) என்துரையே! என்கண்ணே! இது என்னடா! ஏனடா அழுகிறாய்! (துருவன் அதிகமாய் அழுகிறான்)

கண்மணி! உனக்கு ஏதாவதுவேண்டுமா! நீ எத்தையாவது பார்த்தாயா! எங்கேயாவது பயந்தாயா! யாராவது உன்னை அதட்டினார்களா! யாராவது அடித்துத் திட்டினார்களா!

துருவ:—ஆம். (தலையை அசக்குகிறான்)

கமாஸ் ஆதி.

சுநீதி:—ஏலா ஏட்சேவு ஏவரேமி ஜெப்பிரி சாமி (ஏலா)
புண்யமூர்த்திகனுகாநின்னு
கன்னவாரேமன்னரன்ன
கண்ணீருநுஞ்சங்யால
ஒரன்னன்னன்னன்ன (ஏலா)
ஈபுவிலோ கலவாரு
தப்பிப்பு மாட்லாடேரா
பொப்பலிடங்யாலநனுகண்
னப்பப்பப்பப்பப்பா (ஏலா)

புண்யமூர்த்தி! உன்னைத்திட்டி அடிக்கக்கூடிய பாவிகளும் இவ்வுலகில் இருக்கிறார்களா? அப்படிச் செய்துவிட்டு அவர்கள் உயிருடன் வாழ எண்ணுகிறார்களா? கண்மணி! அஞ்சாதே! உன் தந்தை மகாராஜனிருக்கிறார். அவரிடம் சொல்லி அவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்கும்படி செய்கிறேன். அப்படி செய்தவர்களைச் சொல்.

துருவ:—அம்மா! உத்தமனுடைய தாயார் என்னை அடித்தாள். வாயில்வந்தபடி எல்லாம் சொல்லி திட்டினாளம்மா.

சுநீதி:—ஐயோ! அந்த பாவியிடம் ஏனடாபோனாய், அன்றைக்கே அரண்மனைக்கே போகாதே என்று சொன்னேனடா. என்னடா உன்னை செய்தாள். பரமசண்டாளி என் துரையை என்ன ஹிம்சித்தாள் (நலினீயைப் பார்த்து) அடி நலினீ! உனக்கு ஒன்றும் தெரியாதா! மரம்போல் பேசாமல் நிற்கிறாயே! என் வயிறு எரிகிறதே! தெரிந்ததைச் சொல்லேன். என்னால் பொறுக்கமாளவில்லை. குழந்தையின் கண்கள் அழுது அழுது சிவந்து விட்டதே! கண்ணீர்களால் கன்னங்கள் கரைந்து வருகின்றனவே! ஐயோ! சீக்கிரம் சொல்லேன்.

நலினீ:—தேவி! விதூஷகன் சொல்லியதின்பேரில் நான் சுருசி தேவியின் அந்தப்புரத்தில் ஓர் கம்பத்தின் பக்கத்தில் மறைந்து நின்றிருந்தேன். அப்பொழுது மகாராஜா உத்தமனை தன்மடியில் உட்கார்த்திவைத்துக்கொண்டு சீராட்டி வந்தார். மகாரா

ஜாவின் சமீபத்தில் தேவி நின்றிருந்தாள். அச்சமயம் துருவன் உள்ளே வந்து அவர்கள் சமீபம் போக எத்தனித்தான். நான் அவனை தடுத்து வெளியில்போக எவ்வளவு சொல்லியும் என்னை திமிரிக்கொண்டு மகாராஜனின் மடியிலேறவேண்டி சமீபம் போனான். சுருசிதேவி இவனைக் கண்டவுன் அடங்கா கோபங்கொண்டு இவனை அடித்து அதட்டி வெளியில் தள்ளினாள். மகாராஜா இவைகளைப் பார்த்தும் பேசாமலிருந்தார். தன் வயிற்றில் பிறந்தவனுக்குத்தான் இந்த ஆஸனமென்று அடிக்கடி சொன்னாள். இதுவேதான் நடந்தது.

சுநீதி:—ஹா! (பெரும் துக்கத்தில் மூழ்கிறாள்) என் செல்வத்தின் கையையா கரகரவென்று இழுத்தாய்! அடி! பாவி! உன் கை அப்படியே துண்டித்து விழாதா (துருவனுடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு) குழந்தையின் கோமலமான கரங்கள் எவ்வாறு நோவுகிறதோ! என்கண்ணே கைவலிக்கிறதா! (மண்டையைத் தொட்டு) மண்டை வலிக்கிறதா! ஐயோ! நீ கேட்டதற்கு போக வேண்டாமென்று சொன்னேன். நீ கேட்கவில்லை. அரண்மனையில் எல்லோரும் விசுவாசம் காட்டுகிறார்கள் என்று சொன்னாய். அடா! பார்த்தாயா! அவள் பரமகாதுகி! சண்டாளி! துரோகி! ஈவு இரக்கம் கொருசமேனும் இல்லாதவள். அடி ராக்ஷஸி! இந்த பாலனைதொட்டு அடிக்கவும் திட்டவும் உனக்கு மனம்வந்ததா!

துருவ:—அம்மா!

(போடா போடா பாவி என்ற மெட்டு.)

குடுமி பிடித்திழுத்தாளம்மா
குட்டுகளைப் போட்டாளம்மா
கன்னங்களை கிள்ளினாளே
கடிந்துகடிந்து தள்ளினாளே (1)

அங்கமெல்லாம் தளர்ந்துபோச்சு
ஆதரணைகள் போகலாச்சு
அற்பர்களு மேசலாச்சு
அனைவருக்கு மிந்தபேச்சு (2)

தந்தைபத முனக்குஇல்லை
தாஸிமக னென்றசொல்லை
தவம்புரிந்தால் தொலையும்தொல்லை
தாயேஇது மறக்கவில்லை (3)

அடித்ததும் திட்டினதும்கூட எனக்கு வருத்தமில்லையம்மா! உன்னை தாஸி தாஸி என்று சொல்லிக்கொண்டே இருந்தாள்.

இதை ஒவ்வொரு தடவை கேட்கும்பொழுதும் என் வயிறு அப்படியே குமுறிக்கொண்டே இருந்தது. உன் வயிற்றில் நான் பிறந்ததால் உத்தமனைப்போல் நான் உட்காரக்கூடாதாம். ஏனென்றால் நீ தாஸியாம்.

சுநீதி:—ஈசனே! இந்த கஷ்டத்தையுமா நீ கொடுத்தாய். ஹா! நான் தாஸியா! அக்னிசாக்ஷியாய் நான் அவரை மணந்தவளல்லவா! ஐயோ! இந்த அநியாயத்தை நான் யாரிடம் முறையிட்டுக் கொள்வது. அடி காதுகை! உனக்கு ஏன் இப்படி துர்புத்தி உதித்தது. ஒன்றுமறியாத பச்சைக்குழந்தையை தன் தந்தையிடம் போகவொட்டாமல் தடுத்தாயே! அவனுக்கும் ராஜன் நெருங்கியவரல்லவென்று காட்டினாய். தாயான என்னையும் தாஸி என்று சொன்னாய். உன்னுடைய இந்த கடூர சேஷ்டைகளை நான் எப்படி சகிப்பேன். இவ்வகை தாய்தந்தையர்களுக்கா நான் பிறந்தேன் என்று பால்வடு மாறாத பச்சைக் குழந்தை பரிதவிக்கிறதே! அடி துரோகி! என் கிளியை இப்படி கதறவிட்டுப்பார்த்து உன்மனம் களித்ததா?

முகாரி சாப.

உள்ளமும் குளிர்ந்ததோ துள்ளவும் நேர்ந்ததோ
பிள்ளையை அடித்த பாவி (உள்ள)
எள்ளளவாகிலும் கிருபைவரவில்லையோ உன்
வள்ளலே அறிவானே பச்சைப்பசுங்கிளி (உள்ள)
உறக்கச்சொன்னாலும் உடலெல்லாம் நடுங்குமே
மிறட்டியடித்து திட்டி வெறட்டிவிட்டாய் வெளியில்
தாரைதாரையாய் கண்ணீர் சொரிந்து வீழ்கிறான்கீழே
பாரமாய் நினைக்கிறான் உயிரையே அரும்பாலன். (உள்ள)

துருவ:—அம்மா! நான் அழுதுகொண்டே நின்றிருந்தேன். காட்டுக்குப்போ. பகவானைக்குறித்து தவம்செய். அவரால் என் வயிற்றில் பிறந்தால் இந்த சிம்ஹாசனம் கிடைக்கும். அழுதால் வந்துவிடுமோ என்றுசொல்லி என்னை அவள் தள்ளினாளம்மா. அப்பாவையும் கேட்டேன். அவரும் சும்மாதானிருந்தார். எனக்கு ரொம்ப அவமானம் ஏற்பட்டிருக்கிறதம்மா. எனக்கு துக்கமும் பொறுக்கமாட்டாமல் உண்டாகிறது. உன் வயிற்றில் பிறந்துவிட்டதால் எனக்கு சிம்ஹாசனம் கிடைக்காமல் போய் விடுமா அம்மா!

சுநீதி:—பாலா! உன் சிறிய தாயார் ஆடியவார்த்தைகளெல்லாம் வாஸ்தவமே. நான் மகா துரதிர்ஷ்டசாலி என்பதற்கு சந்தேகமே

இல்லை. என் வயிற்றில் பிறந்து என் பாலை உண்டு நீ வளர்ந்த தால் என் துரதிர்ஷ்டம் உன்னைத்தொடராமல் எப்படி போகும் என்று அவளுடைய அபிப்பிராயம். இருக்கட்டும். கெடுவான் கேடு நினைப்பான். பிறருக்கு நாம் ஏன் கேடு நினைக்கவேண்டும். மனதை சமாதானம் செய்துகொள்.

துருவ:—அம்மா! எனக்கு அந்த சிம்மாசனத்திலேற ரொம்பவும் ஆசை ஏற்பட்டுவிட்டது. சின்னம்மா ஆடிய வார்த்தைகள் அம்புகளைப்போல் என் மனதை தொளைத்திருக்கின்றன. அதற்கா கவாவது அதை அடைய நான் எத்தனம் செய்யவேண்டும். நான் இனி சும்மா இரேன். உத்திரவு கொடு! அம்மா!

சுநீதி:—கண்ணே! இவ்வளவா உனக்கு ரோஷம். இவ்வாறு உன்னை வருந்தச்செய்து அவளே களிக்கட்டும். நாமே அதைப் பொறுத்து மறந்து விடுவோம். இக்காலம் நமக்கு இப்படியே பிரதிகூலமாக இருக்காது.

துருவ:—இல்லையம்மா! நான் பொறுக்க முடியாது! அவள் ஆடிய வார்த்தைகள் மறக்கத் தகுந்ததல்ல. நான் அதை அடையத் தான்வேண்டும். அதை யார் கொடுப்பார் சொல்லு.

சுநீதி:—ஐயோ! உனக்கு யாரடா இருக்கிறார். உன் சொந்த தந்தையே உனக்கு விரோதியாகிவிட்டபிறகு மற்றெவரால் என்ன முடியும். அந்த ஈஸ்வரன்தான் உன்னைக் கார்க்கவேண்டும். அவனுடைய அருளால்தான் இக்காரியம் முடியும்.

துருவ:—சரியம்மா! சின்னம்மாவும் அப்படியேதான் சொன்னாள்.

சுநீதி:—குழந்தாய்! அதை பெருத்த கபடத்தினால் அவள் சொன்னாள். ஆனாலும் நல்லதைமட்டில் கிரஹித்துக் கொள்வது சாதுக்களின் குணமாதலால் அந்த ஈசனைக் குறித்துத்தான் நீ தவம் செய்யவேண்டும்.

துருவ:—அம்மா!

ராகம்—பழனு கல்யாணி. ஆதி.

தாயே சொல்லலெனவன் ஈசனவன் எந்த
தேசத்தினில் பார்ப்பேன் செய்யவேணு மெதை (தாயே)

அந்த ஈசனென்பவர் யார்.

சுநீதி:—அவர்தான் நாராயணன். அவருக்குத்தான் விஷ்ணு, மதுஸூதனன், மாதவன் என்று பல நாமங்களுண்டு.

துருவ:—அவர் எங்கே இருக்கிறார்.

சுருசி:—அவர் எங்குமிருக்கிறர். அவரில்லாத இடமே இல்லே.

நாதநாமக்கிரியை. ஆதி.

ஈசனில்லா இடமில்லே சந்தேகமில்லே (ஈச)
சாமதமொன்றுமில்லே பாமரத்தோனுமில்லே
தீதுவந்தபோது தீர்ப்பார்யாவரில்லே சந்தேகமில்லே. (ஈச)
கொண்டுவந்தொன்றுமில்லே உண்டானபோது
கொண்டுபோவதொன்றுமில்லே
அண்டமும் ஸ்திரமில்லே
பிண்டமும் ஸ்திரமில்லே
இரண்டுக்கும்வழி ஒன்றுமில்லே சந்தேகமில்லே (ஈச)

எல்லாவற்றிலுமிருக்கிறர். எப்பவுமிருக்கிறர்.

துருவ:—என்ன அம்மா! உன்னிடத்திலிருக்கிறரோ?

சுநீதி:—என்னிடத்திலுமிருக்கிறர் உன்னிடத்திலுமிருக்கிறர்.

துருவ:—என்னிடத்திலுமிருக்கிறரா? (நாலபுறம் நோக்கி) எங்கே இருக்கிறர்?

சுநீதி:—கண்ணே! இதோ ஹிருதயத்திலிருக்கிறர். இந்த கண்களுக்கு அவர் புலப்படமாட்டார். அவரை தரிசிக்கவேண்டுமானல் ஜனங்களின் சஞ்சாரமில்லாத கடுங் கானகத்திற்கு போய் கண்ணேமூடி மனத்தைநிறுத்தி ஹிருதயத்தில் அவரை நினைத்தே இருந்தால், தானே அவர் தென்படுவார். அவ்வாறு நினைப்பதைத்தான் தவம் என்றும் சமாதி என்றும் பெரியோர்கள் சொல்வார்கள்.

துருவ:—அம்மா! அந்த நாராயணன் நான் கேட்பதை எல்லாம் கொடுப்பாரா?

சுநீதி:—குழந்தாய்! பக்தர்கள் எதைக் கேட்டாலும் உடனே அவர் தருவார். இவ்வுலகத்தை ஆக்கவும் அடக்கவும் அழிக்கவும் சக்தியுடைய பிரபு அவரே. அவர்தான் உன் குலத்திற்கும் தெய்வம். உனது துக்கத்தைத் தீர்க்கக்கூடியவர் அவரைத் தவிர்த்து வேறு எவரையும் நான் காணேன்.

யதுகுலகாம்போதி. சாப்.

எங்கெங்கும் பார்த்தாலும் மங்களமூர்த்தி ஸ்ரீ
ரெங்கனதனைப்போல் காணேன் (எங்)
பங்கஜ கண்ணனவன் பக்தருக் கனுகூலன்
பாங்கான வரங்களை பரிவுடனளித்திடும் (எங்)

பாஞ்சாலி அகலிகை பிரகலாத னம்பரீஷன்
ஆஞ்சனேயன் என்ற அடியார்கள் பலகோடி
நெஞ்சத்தில் நிறுத்தியே கொஞ்சமும் தொழுதாலும்
அஞ்சாதேவரம்தந்தேன் மிஞ்சினுய்என்றுசொல்லும் (எங்)

உன்னைப்போன்ற பாலர்களிடம் வாத்ஸல்யம் காட்டும் செந்தா மரைக்கண்ணன் அந்த காரொளிவண்ணன் நாராயணன் ஒருவனே.

துருவ:—அவர் எப்படி இருப்பாரம்மா!

சுநீதி:—அப்பா மகனே! மகரிஷிகளும் யோகிகளுமே இவரை சரியாய் அறியார்கள். அப்படியிருக்க ஓர் பேதையான நான் என்ன சொல்வது. இவருடைய ஸ்வரூபத்தை வெளியில் சொல்வதற்காகவே அநேக மகான்கள், பெண்டு பிள்ளை தனம் வீடென்ற பந்தங்களை விலக்கிவிட்டு உலகில் சஞ்சரித்து வருகிறார்கள். பகவத் ஸ்வரூபத்தை அறிய அபேக்ஷிப்பவர்களிடம் தாமாகவே தோன்றி அதை உபதேசித்து மறைந்து செல்வார்கள். அவர்களால்தான் நீ அறியவேண்டும்.

துருவ:—சரி! நான் போய்வருகிறேனம்மா. எனக்கு உத்திரவு கொடு. (எழுந்து நிற்கிறான்).

சுநீதி:—(திகிலுடன்) கண்மணி! எங்கே போகிறாய்.

துருவ:—வனம்போய் தவம்செய்கிறேன். நீதான் எனக்கு இப்போ சொன்னாயே.

சுநீதி:—மகனே! உலகநீதியை உனக்குச் சொன்னேன். உனக்கு இன்னமும் ஐந்து வயதாகவில்லை. நீயாவது தவம் செய்வதாவது. காட்டில், சிங்கம், புலி, கரடி, காண்டாமிருகம்போன்ற பல துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும். அருந்த தீர்த்தமும் புஜிக்க அன்னமும் கிடைக்காது. ஒரே இருண்ட இருட்டாய் இருக்கும். அங்கு போவதே உனக்கு அசாத்தியம். உட்கார். (கையைப்பிடித்து உட்காரவைக்கிறாள்)

துருவ:—(மறுத்து) அம்மா! எப்படியிருந்தாலும் நான் போவதாகவே நிச்சயம் செய்துவிட்டேன். நான் போய்தான்தீருவேனம்மா! என் மனம் கொஞ்சமேனும் சமாதானமடையவில்லை.

சுநீதி:—இதுவும் என்விதியோ! காலவித்தியாசமோ! தெய்வமே! கணவனைப் பிரித்தும் குழந்தையையும் பிரிக்கவேண்டுமோ! ஏனப்பா அடம்பிடிக்கிறாய்! வேண்டாமடா!

துருவ:—இல்லையம்மா! நான்போகவேண்டும். தவம் செய்து உயர்ந்தபதவிக்கு நான்வருவது உனக்கு இஷ்டமில்லையா! என் என்னை தடுக்கிறாய்.

சுநீதி:—(துக்கத்துடன்) காட்டில் நீ தனியாகவா இருக்கிறது. நீ உன்னத ஸ்திதிக்கு வருவது எனக்கு சம்மதமில்லாமலிருக்குமா! நீ அங்குபோய் உன்காரியங்களை சாதித்துக்கொண்டு க்ஷேமமாய் திரும்பிவரவேண்டுமே என்ற கவலைதான் எனக்கு மேலிட்டிருக்கிறது கண்மணி!

திருப்புகழ்.

(மலடிவயிற்று என்ற மெட்டு.)

துருவ:—சரணாகதர்களிடம் சடுதியிலேயே
கருணாரஸந்தனை களிப்பாய்க்காட்டி
மாணவஸ்தையும் அகலவிடும்பிரபு—அவரன்றோ.

சுநீதி:—சத்தியமே இது என் முத்தே
களிக்க செய்வது கஷ்டமாச்சே
வனத்திலன்றோ வசிக்கவேணும்—துருவராஜா.

துருவ:—ஆமாம் ஆமாம் ஆமாமம்மா
அரியை நம்பினால் போமோசும்மா
ஆபத்து வந்தால் அழிப்பாரவரே—அம்மாவருந்தாதே.

சற்றுமுன் அநந்தநாராயணன்என்னைப்போன்றவர்களிடம் அன்புடையவனென்றும் கருணையைக்காட்டுபவனென்றும் எல்லா ஆபத்துகளினின்றும் பக்தர்களை காப்பவனென்றும் கருதும் வரன்களைத் தருபவனென்றும் அதே அவனுடைய விரதமென்றும் எனக்கு நீயே சொன்னாய்.

சஹானா சாப்.

சுநீதி:—என்ன இனி செய்வேன் அன்னை என்றெண்ணாமல்
சொன்னதை சொல்லுகிறாய் மன்னன்மைந்தனே (என்ன)
கொஞ்சம் யோசித்துப்பாரு தஞ்சமெனக்கு நீயே
வஞ்சிக்க நினையாதே கெஞ்சி கேட்கிறேனப்பா (என்ன)

தாயென்ற கௌரவத்தையும் பாராட்டாமல் இப்படி அடம் பிடிப்பது நியாயமா?

துருவ:—இப்போ ஏனோ உன் எண்ணம் மாறிவிட்டது. அம்மா! அந்த நாராயணன் எனக்கும் நேரிடும் ஆபத்தை எல்லாம் அழிப்பார். என் அபீஷ்டங்களை எல்லாம் தருவார். எனக்கு உறுதி உண்டாகிவிட்டது. எல்லா சுகங்களும் எனக்கு ஏற்பட நீயும்

ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்வாய். (சுநீதியை மூன்றுதடவை பிரதக்ஷிணம் செய்து) இதோ நமஸ்காரம் செய்கிறேன். எனக்கு ஸர்வமங்களமுமுண்டாக ஆசீர்வாதம் செய்.

கமாஸ் சாப்.

(மாதாட பாரதேனே என்ற ஜாவளி மெட்டு.)

ஆசீர்வாதத்தை செய்வாயே அரியைக் காண (ஆசீ)
கூசாமல் போய்வாவென் றுரைப்பாயே தாயே (ஆசீ)
சுத்த வனத்தில் நின்று புத்தியை நன்றாய்வென்று
உத்தம மானதை சித்தித்து வருவேனம்மா (ஆசீ)

சுநீதி:—ஹா! தீர்க்காயுஸ்ஸாய் ஸர்வ மங்களத்துடன் சீக்கிரமே ஊருக்குத் திரும்பிவா.

[போகிறான் பாடிக்கொண்டு.]

ஆனந்த பைரவி ரூபகம்.

(களையெடாமல் என்ற மெட்டு.)

துருவ:— அன்னையாலும் ஆசையாலும் அரியைக்காண செல்கிறேன்
அங்குபொங்கும் ஆநந்தப்பாலை அள்ளிஅள்ளி குடிக்கிறேன் (1)
பச்சைதேகம் பவளவாயாம் பீதாம்பரம் வஸ்திரமாம்
பக்ஷிவாகனம் பாம்புசயனம் புஜங்கள்நான்கும் தோன்றுமாம் (2)
பார்க்கபார்க்க திகட்டாத நேர்த்தியான மூர்த்தியாம்
பிரமனுக்கும் யோகிகட்கும் அருமையான சேர்வையாம் (3)

சுநீதி:—(நின்றுகொண்டு) பிறப்பட்டு போகிறவனை திரும்பச்சொல்வது சகுனத்தடையாகுமே. துருவா! துருவா! இந்த ஸம்ஸாரத்தில் உன்னைத் தவிர்த்து எனக்கு ஒருவருமில்லை. நீயும் வனம் போனபிறகு நான் ஏன் பிழைக்கவேண்டும். எனக்கு நேரிட்ட துன்பங்களை எல்லாம் உன் மதிமுகத்தைப் பார்த்து பார்த்து மறந்துவந்தேன். இனி நான் எப்படி சகிப்பேன். அடி சண்டாளி! என் பொன்மணியை என்னிடமிருந்து பிரியச் செய்தாயே! உன் மனம் குளிர்ந்ததா! உன் எண்ணம் நிறைவேறியதா! ஐயோ! என் துரை வெகுதூரம் சென்றுவிட்டானே! வேகமாகவே போகிறானே! அவனுடைய உருவம் மறைந்துவருகிறது! அந்த மாளிகையில் நின்றுவது பார்க்கிறேன். துருவா!

படுதா விழுகிறது.

2-வது அங்கம் முற்றிற்று.

3-வது அங்கம்.

1-வது சீன்.

முன் காடு.

துருவன் பாடிக்கொண்டு வருகிறான்.

கரகரப்ரியா சாப்

துருவ:—நெடுந்தூரம்வந்தேனே அடவியிற்புகுந்தேனே
உடலைநம்பியே திடமாய்ப்போவேனே (1)
கண்களும்சோருது கால்களும்நோகுது
கடுமையானபசி கொல்லவும்பார்க்குது (2)
ஆனதுஆகட்டும் இனிபின்போவேனே
அன்னையின்சொற்களை மறந்திடுவேனே (நெடு) (3)

இதுதான் காடு என்று தோன்றுகிறது. மரங்கள் அடர்ந்து ஆகாயமளாவி நிற்கின்றன. ஏதோ சிலசப்தங்கள் பலமாகவே கேழ்க்கின்றன. அம்மா சொன்னபடியே எல்லாம் இருந்துவருகின்றன. சாப்பிட்டும் நாழிகையாகிவிட்டது. பசிக்கிறது. குடிக்க கொஞ்சம் தீர்த்தம் அகப்பட்டாலும் போதும். நான் எப்படி போகவேண்டுமோ தெரியவில்லை. யாரையாவது கேட்கலாமென்றாலும் ஒருவரையும் காணேன். இப்படி நேராகவே போய் பார்க்கிறேன். (இரண்டுஅடி வைத்து உடனே குனிகிறான்) ஐயோ! இந்த பாதையில் முட்கள் நிறைந்திருக்கின்றனவே! (எடுத்து போடுகிறான். இரண்டுஅடி வைத்து மறுபடியும் குனிகிறான்) இப்படி முட்கள் இருந்தால் முன்னடி நான் எப்படி போவேன். கீழேபார்த்து போகவோ வெளிச்சமும் இல்லை. இப்படி இருக்குமென்று எனக்கு தெரிந்திருந்தால் ஒரு விளக்கையாவது கூட கொண்டுவந்திருப்பேன். நான் வீட்டுக்குப் போகட்டுமா! சின்னம்மா சொன்ன வார்த்தைக்கா இனி வீடு. சீ! இந்தவிதமாகவா திரும்பிவிடுகிறது. பகவானைத்தேடியே செல்கிறேன்.

[ரிஷிபத்தினிகள் வருகிறார்கள்.]

ஒருவள்:—இது ஏதடி குழந்தை! இந்தக் காட்டிலே ஒண்டியமா எங்கேயோ போகிறது.

மற்றொ:—ஐயோ! வழிதப்பி எங்கேயோ தவிக்கிறதடி?

மூன்று:—ஆமாம்! ஆமாம்! என்ன அழகா இருக்கிறது பார். இன்னம் வருஷம் ஐந்துகூட இருக்காதடி.

ஒருவ:—யாரென்று போய் கேட்டுவிட்டுத்தான் வருவோம்! வாயேன்!

மற்றோ:—கேட்டுவிட்டுத்தானு வருகிறது. ஆசிரமத்திற்கே அழைத்துவந்து விடுவோம். வாடி.

மூன்று:—அப்படியே செய்வோம். அதின் முகம் வாடியிருக்கிறது. பசியோடு இருக்கிறதுபோல் தோன்றுகிறது.

இந்திரசபா மெட்டு.

பாரடீ அதி தூரத்தில் தனியாக
பாலகன் அங்கு போகிறான் விரைவாக (1)
ஏதடீ இது இத்தனை அழகாக
ஏகுவோம் அங்கு வெகு களிப்பாக (2)
யாரா யிருந்தாலும் போய் விசாரிப்போம்
பேரூரை அறிந்து அன்னத்தை அளிப்போம் (3)

[எல்லோரும் துருவன் சமீபம் போகிறார்கள்.]

ஒருவ:—குழந்தாய்! நீ யாரப்பா!

துருவ:—நான் துருவன்.

மற்றோ:—உன் தாயார் தகப்பனார் யார்!

துருவ:—என் தாயார் மாலட்சுமி தந்தை மாதவன்.

மூன்று:—(கைகொட்டி) என்னடி இது! ஒருசாண் இருக்கிறது. தத்துவம் பேசுகிறது. எல்லாம் கதையாய் இருக்கிறது.

துருவ:—என்னைக் கேலி செய்கிறீர்களே! நீங்கள் யார்!

ஒருவ:—அந்த மாதவனைக் குறித்து தாடிவளர்த்து தவம்செய்யும் மகரிஷிகளின் பத்தினிமார்கள் நாங்கள்.

மற்றோ:—உனக்கு பசியாயிருக்கும். அதுதான் நம்முடைய ஆசிரமம். அங்கே வந்து நீ போஜனம் செய்யலாம். வா!

துருவ:—எனக்கு போஜனம் வேண்டாம். அதில் எனக்கு எண்ணமில்லை.

மூன்று:—ஐயோ! பாவம்! வழிதப்பி வந்துவிட்டாயா! உன் தாய் தந்தையர்களை காண்பிக்கவேண்டுமா!

துருவ:—தாயே! ஆம் அம்மா! அவர்களைத் தேடித்தான் போகிறேன்.

தேவாரம்.

(சங்கரனே சங்கரனே என்ற மெட்டு.)

மங்கைகளே சொல்லுகிறேன் மயங்காமல் கேளுங்கள்
மாதவனே என்தந்தை மாலட்சுமி என்மாதா (1)

அவர்களைப் பாராமல் அலைகிறேன் அடவியில்
அதுவேதான் என்நோக்கம் அறிந்திருந்தால் சொல்லுங்கள் (2)

கையெடுத்து கேட்கிறேன் கால்களிலும் வீழ்கிறேன்
கடுந்தவம் புரிவீர்கள் கானகத்தி லிருப்பீர்கள் (3)

சரீர சௌக்கியத்தைவிட்டு அநேக வருஷங்களாய் தவம் புரிந்துவரும் உங்கள் புருஷர்களாவது நீங்களாவது என் தாய் தந்தையர்களை காண்பித்துவிட்டால் அதுவே போதும்.

ஒருவ:—ஹாஹா! அடி! பேசாதே! வாயை மூடு! மூர்த்தி சிறி சானாலும் கீர்த்தி பெரிசு! இவ்வளவு நாள் தபஸ்செய்து நீங்கள் பகவானைப் பார்க்கும் யோக்கியதை ஏற்பட்டதா. பிறரை ஏன் ஏளனம் செய்கிறீர்கள் என்று சொல்கிறார். மகான்கள் இவ்வாறுதான் இருப்பார்களென்று நான் கேட்டிருக்கிறேன். இவர்களைக் கண்ணாலே பார்க்கவும் நமக்கு யோக்யதை இல்லை. அவர்களோடு நமக்கு பரிகாசமென்ன. அவர்கள் சாபம் கொடுத்துவிட்டால் பின்பு கஷ்டம்.

மற்றொ:—வாடி! போவோம்! நமக்கு ஏன் வம்பு! பொல்லாப்பு! பிரஹ்லாத சரித்திரம் மறந்தாபோய்விட்டது! சனகாதிகளின் சாபத்தால் துவாரபாலகர்கள் ஜன்மம் மூன்றெடுத்து பாவத்தை தீர்த்துக்கொண்டார்கள்! போதும்.

மூன்று:—ஐயா! மகாத்மாவே! உமக்கு நமஸ்காரம்! எங்கள் அதிகப்ரசங்கத்தை மன்னிக்கவேண்டும்.

[எல்லோரும் வணங்கிவிட்டு போகிறார்கள். துருவன் முன்னால் போக எத்தனிக்கிறான். சங்கீதம் கேட்கிறான். அதின் திசையை நோக்கி]

ஏது இந்தக் காட்டில் சங்கீதம்! ஓ! ஓ! யாரோ ஒரு பெரியவர் வருகிறார்.

[நாரதர் வருகிறார்.]

யதுகுல காம்போதி ரூபகம்.

நாரத:—பாலம் பாவயத குவலயதள நீலம்—நந்த (பாலம்)

பலித ஸுகிருத நயனபலம்
கலித கலா குதூஹலம் (பாலம்)
தளித தனுஜ சகலதளம்
சமித விஷய ஹாலாஹலம் (பாலம்)
ஆனந்த தனய பலம்
தீனமனோ மீன ஜலம் (பாலம்)

(தனக்குள்) ஆகா! என்ன ஆச்சர்யம். க்ஷத்திரியர்களுக்கென்றே இவ்வகை தைரியமா! என்ன ஸாகஸம்! என்ன ரோஷம்! என்ன மனோ தைரியம்! இவன் பாலனாயினும் ஸபத்னீ மாதாவின் அஸத்தான வசனங்களை மனத்தினில் எப்பவும் தரித்து வருகிறான். சந்தோஷம். அவனுடைய சித்தத்தை சோதித்த பின் ஜோதிஸ்வரூபத்தை நிரூபணம் செய்கிறேன். (வெளியே) அடா! பாலகா! நீ யார்!

துருவ:—(கைகூப்பி) நான் துருவன்.

நாரத:—வத்ஸ! உன்னைப்பார்த்தால் ராஜகுமாரனென்று எனக்குத்தோன்றுகிறது. வீட்டில் தாய் தந்தையர்களோடு சண்டையிட்டு ஓண்டியாய் ஓடிவந்துவிட்டாயல்லவா!

துருவ:—மகரிஷியே! தங்களைப்போன்ற பெரியவர்களுக்கு யோகத்தாலேயே எல்லாம் தெரியலாமே! என்னையும் கேட்கவேண்டுமோ!

நாரத:—(புன்னகையுடன்) ஆம்! எனக்கும் எல்லாம் தெரியும். நீயும் சொல்லவேண்டுமென்று கேட்டேன்.

துருவ:—ஸ்வாமி! என் சிறியதாயார் செய்த அவமானத்தை நான் சகிக்கமுடியவில்லை. அதின் பரிகாரத்தை தேடிக்கொள்ள நான் இங்கு வந்திருக்கிறேன்.

நாரத:—ஆ! குழந்தாய்! ஆச்சரியம்! நீ அவமானத்தை சகிக்க முடியவில்லையா! நீ ஒரு பெருத்த மனுஷ்யன்போலும். அவமானம் சகிக்கமுடியவில்லையாம். போடா வீட்டுக்கு! அவமானமாம். ஸம்மானமாம். கோலி ஆடுகிற பயல் நீ!

துருவ:—ரிஷீஸ்வரரே! நீர் அறிந்தவராயிருந்தும் இப்படி பேசுவது தகுமா? நான் சிறுவன்தான். ஆனால் மானமென்பது சரீரத்துக்குச் சேர்ந்ததா? அல்லது மனதிற்குச் சேர்ந்ததா?

நாரத:—(தனக்குள்) சபாஷ்! பரீக்ஷிப்போம். (வெளியில்) சரீரத்

துக்கும் அதின் விருத்திக்கும் காரணமாயுள்ள வயதுக்கும் சேர்ந்தது.

துருவ.—(ஆச்சர்யத்துடன்) ஏனய்யா! இப்படி சொல்லுகிறீர்!

நாரத:—அப்படி இல்லாவிட்டால் எப்படி?

துருவ:—சரீரத்துக்கு சேர்ந்த துக்கத்தை வியாதி என்றுதானே சொல்லுவார்கள்.

நாரத:—மானமென்பது?

துருவ:—மனதிற்கு ஏற்பட்ட விகாரம்.

நாரத:—ஆகையால் உனது அபிப்பிராயம் என்ன?

துருவ:—மானமென்பது சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஒன்றே! நான் கோவியாடும் பயல் என்றும் எனக்கு அவமானம் ஏதென்றும் தாங்கள் சொன்னது சரி இல்லை.

நாரத:—(சந்தோஷத்துடன்) மனம் ஒன்றேயாயினும் வயதிற்கு ஒட்டி அதின் சேஷ்டைகள் வெளியாகும். இச் சிறுவயதிலேயே உன் மனம் இத்தகைய உணர்ச்சியை அடைந்ததே என்றேன்.

துருவ:—சாஸ்திரமென்பது இளைஞர்களுக்கும் கிழைஞர்களுக்கும் பொதுதானே?

நாரத:—ஆம்! அப்படியேயாயினும் உன் எண்ணம் தவறு. இதை அறிந்துகொள். பூர்வ ஜன்மத்தில் செய்த பாபமென்ற இருள் இந்த ஆத்மாவுக்கு இயற்கையாயுள்ள ஞானத்தை மறைத்து விட்டு அஞ்ஞானத்தைக் கொடுத்துவிடுகிறது. ஞானமுள்ள வரையில்தான் சுகம். அஞ்ஞானம் ஏற்பட்டவுடன் துக்கம் மேலிடுகிறது. ஆனதால் குழந்தாய்! சந்தோஷத்துடன் சுகமாய் வாழவேண்டுமென்று நினைப்பவன் நல்ல ஞானம் பெற்று தனக்கு எதிலும் சுதந்திரமில்லை என்றும் ஒவ்வொன்றும் ஈசுவரனால் கொடுக்கப்படுகிறதென்றும் எண்ணி விளைந்த துக்கத்தை மறந்து பிறரால் ஏற்பட்டதென்ற அஞ்ஞானத்தை நீக்கிக்கொள்ளவேண்டும்.

துருவ:—மகரிஷே! என் கக்ஷியை இவ்வாறு நிறுத்திவிட்ட மகான் தாங்கள் யாரோ? நான் அறியலாமா?

நாரத:—குழந்தாய்! எல்லோரும் என்னை நாரதர் என்பார்கள்.

துருவ:—தாங்களா நாரதர். குருமகாராஜ்! நமஸ்காரம்! என் எண்ணம் கைகூடிவிட்டது. என் தாயாருக்கு தாங்கள் பலதடவைகளில் உபதேசம் செய்திருப்பதாக கேட்டிருக்கிறேன்.

நாரத:—ஆம்! அந்த பாத்தியம் வைத்துக்கொண்டுதான் உன்னை வீட்டுக்கு திரும்பச் சொன்னேன்.

துருவ:—நான் வீட்டுக்கு திரும்புவதா! ஒருக்காலுமில்லை. என் தந்தை சிம்ஹாஸனம் எனக்கு வேண்டும். அதற்காக நான் ஆதிநாராயணனை ஆராதிக்க புறப்பட்டு இருக்கிறேன்.

நாரத:—அடாடா! என்ன இது கிள்ளுக்கீரை வியாபாரமா! நாராயணனின் ஆராதனை! எல்லா தெய்வங்களையும் சுலபமாய் ஆராதித்துவிடலாம். கண்மூடி கடலில் உரங்கும் காரொளிவண்ணனை கோவிந்தனைமட்டில் ஆராதிப்பது எளிதல்ல. ஆராதித்தாலும் சீக்கிரத்தில் அவருடைய முகம் மலராது. நீயோ அறியா பாலகன். எவ்வளவென்று அவரைப்பற்றி நான் உனக்குச் சொல்வது. கோடிக்கணக்கான மகரிஷிகள், பெண்டுபிள்ளைகளற்று, யோகங்களைக்கற்று, அநேக ஜன்மங்களை விற்று, எங்கும் உற்று உற்றுத் தேடியும், அவருடைய பிரசாதமார்க்கம் வெளியாகவில்லை. சுலபமென்றெண்ணும் பக்திமார்க்கமும் ஞானத்தால்தான் அடையத்தகுந்ததாயிருக்கிறது. குழந்தாய்! ஆதலால் தவமென்ற ஆசையை ஒழி! இதுதான் உன் வீட்டுக்கு வழி! போ?

துருவ:—என் எண்ணம் எனக்கு நிறைவேருதா!

நாரத:—அசாத்தியமான காரியத்தில் உன் எண்ணம் ஏற்பட்டுவிட்டால் அது எப்படி நிறைவேரும்.

துருவ:—மகரிஷே! ஓர் காரியம் அசாத்தியமென்பது எதுவரையில்? சூரியன் உதித்த பின்பும் இருளுண்டோ? மழைபெய்த பின்பும் தாபமுண்டோ? சாதுக்களின் ஸமாகமம் ஏற்பட்ட பின்பும் துக்கமுண்டோ? அப்படியே உண்டென்றால் இக் கையில் நீர் ஏந்திருக்கும் வீணை வீணே! தங்களுக்கு ஏன் இந்த கீர்த்தி? ஏன் பதினன்கு லோகங்களிலும் சஞ்சரிக்கும் சக்தி? ஏன் பெண்டுபிள்ளைகளை விட்ட விரக்தி? எப்படியும் தாங்கள் சுகமாயிருக்கிறீர்! நான் துக்கமடைந்தவன். போய்வருகிறேன். நமஸ்காரம்.

நாரத:—ஆ! பலே! பலே! மெத்த சந்தோஷம்! துருவா! உன் உறுதியை பரீக்ஷித்தேன். மிகவும் மெச்சினேன்.

தேவகாந்தாரி ஆதி.

சதி சுநீதியின் உத்தம புத்திரனே
செய்த சம்பாஷணையால் உந்தனிடம் மகிழ்ந்தேன் (சதி)
அதி சீக்கிரத்திலே ஆனையைக் காத்தவன்
ஜோதி ரூபமுள்ள லோகத்தைத் தருவானே (சதி)

இனி அஞ்சவேண்டாம். உன் ஜனனி உபதேசித்த மார்க்கம் தான் உத்தமம். உன் தீவினைகளை தீர்த்து உனக்கு அருள் புரியும் சக்திமான் அந்த ஸ்ரீமான் தான். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் அடைய விரும்புவோர் அவரைத்தான் ஆராதிக்கவேண்டும். அதின் வழியைச் சொல்லுகிறேன். கவனமாய் கேட்பாயாக!

துருவ:—குருமகாராஜ்! மிக்க கவனத்துடன்தான் இருக்கிறேன். தயவு செய்யவேண்டும்.

நாரத:—குழந்தாய்! இதோ ஒருபாதை தெரிகின்றது பார். அதின்வழியாய் நேராக வடதிசை போனால் பரம பாவனையான யமுனை நதிக்கரை வந்துசேரும். அங்கு மதுவனம் என்ற புண்ணியபூமி ஒன்றுண்டு. அது அநேகர் தவம்செய்து சித்தி பெற்ற ஸ்தலம். அவ்விடத்தில் உன் தவத்திற்காக ஓர் இடத்தை நீ ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். யமுனையில் மூன்று வேளையும் நீ நீராடவேண்டும். இருநயனங்களையும் நன்றாய் மூடிக்கொள்ளவேண்டும். உனக்காகவென்றே ஓர் சுலப வழியைச் சொல்லுகிறேன். கவனித்துக்கேள். சுவாசத்தை அதிகமாய் விடாமல் அடக்கிக்கொள். ஐந்து ஞானேந்திரியங்களையும் ஐந்து கர்மேந்திரியங்களையும் அவைகளின் காரியங்களைச் செய்யவொட்டாமல் தடுத்துவிடவேண்டும். அப்போது மிகுந்த படபடப்புடன் பறந்தோடும் மனதை ஒன்றையும் நினையாமல் செய்து "ஏகமேவ நத்விதீயம் பிரம்ம" என்ற அவ்வொன்றிலேயே நிறுத்தவேண்டும். சற்று கவனி! அவ்வொன்றுதான் பிரளயத்திலும் நிற்பவர். அப்பொழுது அவருக்கு வாஸுதேவரென்று பெயர். அவருடைய ஸ்வரூபத்தை நீ நினைக்கவேண்டும். அதற்குத்தான் தியானம் என்று பெயர். தவமென்றும் சொல்வார்கள். மனம்மட்டில் சலிக்காமலிருக்க

வேண்டும். குழந்தாய்! அவ்வாறு மனதை நிறுத்துவதுதான் கஷ்டம். அவரைத் தவிர்த்து தனக்கு வேறு கதி இல்லை என்று உறுதி ஏற்பட்டுவிட்டால் உடனே அவரிடம் மனது பதிந்துவிடும். மனது பதிந்துவிட்டால் பகவானுடைய முகமலர்ச்சி ஏற்பட்டுவிடும். இதற்காக ஓர் மந்திரத்தை உபதேசம் செய்கிறேன்.

[ஓம் நமோ பகவதே வாஸுதேவாய என்று துருவனுடைய காதில் உபதேசம் செய்கிறார்.]

இது த்வாதசாக்ஷர மந்திரம். இந்த மந்திரத்தையே அடிக்கடி சொல்லிவா. மனதால் அவருடைய ரூபத்தையே நினைத்துவா! அவருடைய ரூபம் எப்படி இருக்கிறது தெரியுமா! சொல்கிறேன். கேள்.

நொண்டிச்சிந்து.

சிந்தயஹிருதிஹரிமூர்த்திம்
கிருந்ததிஸஹிதவஹிருதயார்த்திம்
வரவிதரணசீலம் (பாலக)
நாரதமுககிருதநுதிலோலம்
கலதிருதவனமாலம்
கிலிதநிகிலாசுபஜாலம்
குவலயதலநீலம் (பாலக)
குமதிஜனவிதளனகாலம்
திலகசுசோபிதபாலம்
கலிதசங்கசக்ரபுஜஸாலம்
பாதகிலோககராளம்
திதிஜகளார்பிதகரவாளம்
முகுராதுளிதகபோலம்
மஹிவிலஸிதமுககோலம்
பதநதஸுரபாலம்
பாலிதபுவனஸுகோளம்
கரிநுதபாமூலம் (பாலக)
கடிதடகலிதஸுசேலம்
புவிகிருததசலீலம்
பாகவதப்ரியதமபாலம். (சிந்தய)

செவ்வரை மலர்ந்த சிகப்பு மிகுந்த கமலம்போன்ற கண்கள், மகரகுண்டல மணிமண்டித கர்ணங்கள், கண்ணாடிபோன்ற கன்னங்கள், வளைந்தடர்ந்த புருவம், விசாலமான லலாடதேசம், கௌஸ்தபசோபித கண்டம், நீண்டு உருண்டு திரண்ட புஜதண்டம், பருத்துயர்ந்து நீண்டகன்ற மார்பு, அங்கு

ஸ்ரீவச்சமென்ற மச்சம். நுண்ணிய இடை, சிங்கநடை, பீதாம்பர உடை, கதளீகம்பம்போன்ற துடை, (தயங்கி த்யானம் செய்து) ஹா! துருவா! சரணம் (கைகூப்பி) அழகிய சரணம், கமலம்போன்ற சரணம், நகமணி விராஜித சரணம், கங்கையை ஜனித்த சரணம், சரணுகதர்களை ரக்ஷிக்கும் சரணம், லக்ஷ்மியால் தழுவப்படும் சரணம், கடுந்தவத்திலிருந்து மகரிஷிகள் தேடும் சரணம், யோகிகள் ஹிருதயமாகிற பெட்டியில் யோகமாகிற சாவியால் பூட்டிவைத்திருக்கும் சரணம், மரணத்தை போக்கும் சரணம், முக்தியைத்தரும் சரணம், அதுதான் உனக்கு சரணம், பவதரணம். இதனை மறந்துவிடாதே!

[துருவன் வணங்குகிறுன்.]

ஸர்வமங்களமுண்டாகட்டும்.

படுதா விழுகிறது.

2-வது சீன்.

ஓர் மரமடர்ந்த பாதை.

[விதூஷகன் பக்ஷணத்தட்டை தலையில் வைத்துக்கொண்டு பிரவேசிக்கிறுன்.]

விதூஷ:—உஸ்! உஸ்! அப்பாடி! அப்பா ஆடி! அம்மா பாடி! ஹா! என்ன சிரமமடா! போதுமடா இந்த பிழைப்பு! இன்னமும் எவ்வளவுதூரம் போகவேண்டுமோ! இது வேண்டாமென்று எவ்வளவு நான் தயங்கியும் அப்பாவிதான் அப்படி நிர்ப்பந்தம் செய்வாளா! இல்லாவிடில் எனக்கு எஜமானத்துரோகமென்ற பெரும் பாவம் தொடருமென்றுளே! சீ! நம் துருவன் இதை ஒருக்கால் சாப்பிட்டாலும் என்ன! அவனு சாகுவான்? இல்லவே இல்லை. என் சரீரமே எனக்கு பாரமாயிருக்கிறது. வேறென்றையும் தூக்கிக்கொண்டு போவதா! எவ்வளவு தூரம்! எவ்வளவு பாரம்! ஐயோ! (நால்புறமும் பார்த்துத் தட்டைத் தேடுகிறுன். தலையிலிருந்ததை மறக்கிறுன்) காணுமே! அந்த தட்டை நான் கீழே வைத்து வந்துவிட்டேனு என்ன! அடா பாவி! அம்மரத்தினடியில் நிழலுக்காக தங்கி இருந்தேனே! இப்படி நான் லோகோ ஆபீஸ் இஞ்சினைப்போலே முன்பின் போய்க்கொண்டிருந்தால் நான்குறித்த

இடத்துக்குப் போவதெப்படி? அவசரக்காரனுக்குப் புத்தி மட்டுஎன்பது சரிதான். (எழுந்திருக்கிருன்) என் கிருஹசார ம். கிருஹசாரம். (தலையில் அடித்துக்கொள்ளுகிருன்) கைக்கு ஏதோ தடைபடுகிறதே (ஆச்சர்யத்துடன் தட்டை கீழே இறக்குகிருன்) அடாடாடா! என்ன புத்தி! உலக்கைகொழுந்து தான். நான் மடையன். தலையிலிருந்தது தெரியவில்லையே! இடையன் கதை சரியாயிருக்கிறது. இது எப்படி தெரியாமல் போயிற்று. காரணமென்ன. அதை அறிந்தபிறகுதான் மேல் காரியம். (யோசிக்கிருன்) ஓகோ! தெரிந்தது. தட்டு தலைமேலிருந்தாலல்லவோ தெரியும். அது தலைப்பாகையின் மேலிருந்தது. தட்டின் பாரம் தலைப்பாகைக்கு போய்விட்டது. தலைக்கு வரவில்லை. அதினுல் மூளைக்கும் ஏறவில்லை. சரிதான். நல்ல வேலை. துருவனிருப்பிடம் தேடிச் செல்கிறேன். என்ன செய்யலாம். (எழுந்திருக்கிருன்)

[ஓர் ரிஷிபத்தினி தண்ணீர் குடத்துடன் வருகிருள்.]

(தனக்குள்) இவள் யாரோ தெரியவில்லை. துருவனுடைய விஷயத்தை விசாரிக்கிறேன். (வெளியில்) அம்மாமி! சௌக்கியமா! மாமா சௌக்கியமாயிருக்கிருரா!

ரிஷிப:—அடா! நீ யாரடா! நாம் உன்னைக் கண்டதே இல்லையே!

விதூஷ:—நீங்கள் என்னைப் பார்த்திருக்கமாட்டீர்கள். நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்.

ரிஷிப:—எங்கே பார்த்திருக்கிருய்.

விதூஷ:—ஒருநாள் மத்தியான்னம் நான் நன்ருய் தூங்கினேன். அப்பொழுது.

ரிஷிப:—என்ன ஸ்வப்னத்திலா கண்டாய்! ஹாஸ்யம் செய்கிருயே!

விதூஷ:—மன்னியுங்கள். இங்கே ஐந்து வருஷப் பையன் ஒருவன் தபஸ்ஸுக்காக வந்தானே?

ரிஷிப:—அவரா பையன்! அழகுதான்! மகாத்மா. யோகீஸ்வரர். அவரை ஏன் தேடுகிருய்?

விதூஷ:—அவருக்காக பக்ஷணங்களை நான் கொண்டுவந்திருக்கிறேன். கொடுக்கவேண்டும்.

ரிஷிப:—ஆகா! உனக்கு வேறு வேலை இல்லையோ! வீட்டுக்கு போ! போஜனம்செய்ய அவரை நாம் எவ்வளவு வேண்டியும்

நமக்கு அவர் தத்துவோபதேசம் செய்து போய்விட்டார். இப்பொழுது அவர் நாரதருடைய உபதேசம் பெற்றுவிட்டார். இனி அவருக்கு பசி ஏது! தாகமேது! தவத்திற்காக கடுங்கானகம் புகுந்துவிட்டார். அவரைக் காண்பது கடினமே.

விதூஷ:—ஹா! நாரதருடைய உபதேசமாகிவிட்டதா! தேவி! இந்த நற்செய்தியைத் தந்த தமக்கு வந்தனம்.

ரிஷப:—நான் போய் வருகிறேன்.

[போகிறாள்.]

விதூஷ:—அப்பா! தெய்வம் என்பக்கத்தில் எப்பொழுதுமிருக்கிறது. இந்த உயர்ந்த தேகத்தை சிரமப்படுத்துவதில் அவருக்கு கொஞ்சமேனும் இஷ்டமில்லை. இந்த தட்டை இங்கேயே விட்டெறிந்துபோகிறேன். துருவனிடம் கொடுத்துவிட்டதாக ஸுருசியம்மாளிடம் சொல்லிவிடுகிறேன்.

[தட்டை வைத்துவிட்டு திரும்புகிறான். வைரசித்தன் விரைவாய் கட்கத்துடன் பிரவேசிக்கிறான்.]

வைரசித்தன்:—சமமோதகரே! இங்கே ஏன் வந்தீர்?

விதூஷ:—அடா வைரசித்தா! நீ எங்கடா வந்தாய்? யாருடைய உயிரைத் தொலைக்கப் புறப்பட்டாய்? இது என்ன அவசரம்.

வைரசி:—சாதாரணமாகவே நீர் இப்படி சொல்வதுண்டு. இப்போது அந்த காரியமாகவே புறப்பட்டிருக்கிறேன். என்ன தோஷம். நீர் எங்கிருந்து வருகிறீர்.

விதூஷ:—என் சங்கதி பிறகிருக்கட்டும். உன் கத்திக்கு காவு யார்?

வைரசி:—உங்களுக்குத் தெரியாதா? நம்ம மகாராணி உத்திரவுதான். அந்த சின்ன பயல் இங்கே ஓடிவந்திருக்கிறானும். அவனை வேலைதீர்த்து விடும்படிக்குத்தான். ஏராளமான பணம் கிடைக்கும். சும்மா வருமோ அம்மாசை பருக்கை.

விதூஷ:—(திகிலுடன்) எந்தப் பயலையடா? துருவனையா?

வைரசி:—எனக்குப் பெயர் தெரியாது. மூத்த ராணி குமாரன்.

விதூஷ:—(தனக்குள்) அடி! சண்டாளி! என்னிடம் விஷங்கலந்த பணிகாரங்களை அனுப்பியதுமன்னியில் கட்கத்துடன் இவனையும் அனுப்பித்தனையா? நான் கொடாமலிருந்து விடுவேனென்றோ? உனக்கு சந்தேகம். நல்லது. இவன் என் கண்ணுக்கு தென்பட்டானே. தெய்வாதீனம். (வெளியில்) வைரசித்தா!

பச்சைக் குழந்தையையும் கொல்லத் துணிந்துவிட்டாயா? கேள். அவனைத் தேடித்தான் நானும் இங்கே வந்தேன். அவன் நடுக்காட்டில் புகுந்துவிட்டதாய் தெரிகிறது. அவனை இனி கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நீ அவனைக் கொன்றதாகவே சொல்லி இனும் வாங்கிக்கொள். தேவையானுல் நானும் சாக்ஷியம் சொல்லுகிறேன்.

வைரசி:—விதூஷகரே! உங்கள் சாக்ஷியத்தை அவள் ஒருக்காலும் நம்பமாட்டாள். மேலும் நான் பிரமாணிக்கம் செய்து கொடுத்திருக்கிறேன். ஆதலால் ஆரம்பித்த காரியத்தை நான் முடித்து தீருவேன்.

[அவசரமாய் ஓடிவிடுகிருன். வழியில் வைத்திருக்கும் பக்ஷணத்தட்டைப் பார்த்து ஆச்சர்யமடைந்து]

ஓகோ! இங்கே ஏது பக்ஷணங்கள். வயிராற புசித்தால் வெகு தூரம் செல்ல சௌகரியமாயிருக்கும்.

[கீழே உட்கார்ந்து புஜிக்கிருன். விதூஷகன் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிருன். நலினீ வெகு வேகமாய் ஓடிவருகிருள். விதூஷகன் அவளைத் தடுத்து]

விதூஷ:—நலினீ! எங்கே ஓடுகிருய்?

நலினீ:—(பிரமித்து) விதூஷகரே! நல்லவேளை! வாரும்! வாரும்! துருவன் மாண்டான். மாண்டான்.

விதூஷ:—அவசரப்படாதே! விவரமாய்ச் சொல்.

நலினீ:—காரியம் அவசரமானது. வைரசித்தன் அவனை கொல்வதற்காக ஓடி இருக்கிருன். ஆலஸ்யம் செய்தால் காரியம் மிஞ்சி விடும். வாரும். போவோம்.

விதூஷ:—பயப்படாதே! அதோ பார்!

நலினீ:—(கலவரத்துடன்) ஓகோ! இதென்ன இது! இவன் எதை புசிக்கிருன். இங்கே ஏது பக்ஷணம்.

விதூஷ:—அவைகளெல்லாம் விஷங்கலந்தவைகள். அவைகளை துருவனிடம் கொடுக்கும்படி சுருசி என்னை அனுப்பித்தாள். நான் இங்கேயே போட்டுவிட்டேன். இச்சண்டாளன் வைரசித்தனை திரும்பும்படி நான் எவ்வளவு சொல்லியும் அதைக் கேளாமல் ஓடினுன். ஆகையால் அவைகளைத் தின்று மடியட்டும் என்றே வேடிக்கை பார்க்கிறேன்.

நலினீ:—(ஆச்சரியத்துடன்) அப்பாவி விஷங்கலந்த பணியாரங்களை யுமா அனுப்பித்தாள். போகட்டும். இத்துஷ்டன் அவைகளைத் தின்றுவது மடியட்டும். மடியட்டும்.

விதூஷ:—கத்தாதே! கொஞ்சம் மறைந்து நின்று வேடிக்கைப் பார்ப்போம்.

வைரசி:—(புஜித்துக்கொண்டு) ஓகோ. அப்பம். மைசூர்பாகு. தோசை. தூதபேடா. (இடை இடையே) தண்ணீர்! தண்ணீர்! தாகம்! தாகம்! ஐயோ! மயக்கம் வருகிறதே! (மீர்ந்ததை மறு படியும் தின்றுகொண்டு) ஐயோ! மாரடைக்கிறதே! கொஞ்சம் தீர்த்தம்! தீர்த்தம்! (எழுந்திருக்கிறன். தடாலென்று வீழ் ந்து சாகிறன்.)

நலினீ:—ஆகா! வீழ்ந்துவிட்டான். செத்துப்போனன் போல இருக்கிறது.

விதூஷ:—அவன் சாகவில்லை. உயிர்மட்டில் வெளியே போய்விட் டது. எந்த வழியாய் போச்சுது என்பதைப் பார்ப்போம். வாயால்தான் போக வழிஇல்லை. போவோம். வா.

(இருவர்களும் போகிறர்கள்.)

படுதா விழுகிறது.

3.வது சீன்.

சுநீதியின் அந்தப்புரம்.

சுநீதி:—ஹா! துருவா! துருவா! நேற்று இந்நேரத்திற்கெல் லாம் நீ வாதமாடிக்கொண்டிருந்தாயே! கண்மணி! நீ இன்று நீ சமாதான மடைந்துவிட்டாயா? ஞானேபதேசமாகிவிட்டதா? உன் மனம் நிம்மதையடைந்துவிட்டதா? என் சம்பந்தத்தை ஒழித்தனையா? எல்லாம் உனக்கு சம்பாவிதம், நீ புண்ணிய வான். நான் பாவி. உன்னைப் பிரிந்தும்என் உயிர் நீங்காமல் உடலிலேயே இருந்துவருகிறது. நான்சேகரித்த பாபமனைத் தையும் சிலவழித்து அல்லவோ தீர்க்கவேண்டும். (நால்புரமும் பார்த்து) என் மனதை எப்படி நான் சமாதானம் செய்து கொள்வேன். எதைக் கண்டாலும் என் கண்மணியின் ஞாப கம் மேலிடுகிறது.

காவடிச்சிந்து.

பூசுவண்டு வரிசமுண்டு என்ற மெட்டு.

இந்தஆடை வந்தபேடை தந்தமேடை நீந்துமோடை
சிந்தனைக்கு வந்துமனம் ஓடுதே என்ப
ரந்தகண்கள் நால்புரமும் நாடுதே என்தன்
பஞ்சனைமீதில் ரஞ்சிதமாக சஞ்சலகிளி குஞ்சுதனை
கொஞ்சி குலாவி பாட கூடுதே
பஞ்ச வர்ஷ பாலகனைத் தேடுதே (இந்த)

இதோ! அவன் உடுத்த உடை. பிடித்த குடை. ஆடும் தங் கப்பதுமை. ஹா! தினம் அன்னமுண்ணும் பொற்கிண்ணம். பாவி நான் வயிருற புஜித்தேன். இளம்பசியுள்ள என் பசுங் கிளி எங்கு சோர்ந்து நிற்கின்றதோ? என்ன மூர்ச்சைபாய்த் தான் கிடக்கின்ருனே? எந்த துக்கமடைந்து தவிக்கின்ரு னே? படுத்தெழுந்தவுடன் அவன் நாக்கு உலருமே! பசி குடலைப்பிடுங்குமே! குழந்தையின் பசி கொள்ளிதேள் என் பார்களே! ஐயோ! எந்த ஆகாரத்தை இவன் எங்கே என்று தேடுவான்? நடுவனத்தில் ஆகாரமேது. தனக்கு ஆகாரத் திற்காக போய் கொடிய மிருகங்களுக்கு தானே ஆகாரமாய் ஆகுவானோ? ஆகியேவிட்டானோ? ஹா! ஹா! கண்மணி! கண்மணி! (விம்மி விம்மி அழுகிருள்) இவன் ஆகாரமாகான். நிச்சயம். எவ்வகை கொடியதாயினும் என் அதிரூப சிந்தா மணியைக் கண்டவுடன் இந்த மிருக சுபாவம் மாறிவிடும். ஆனல் நம் ராஜனுக்குமட்டில் நற்குணம் தீக்குணமாக மாறி யது. ஆசையோடு வந்த மைந்தனை வெளியில் விரட்டினர்.

[உத்தானபாதன் பிரவேசிக்கிருன். சுநீதி திகிலுடன் பார்க்கிருள்.]

உத்தான:—சத்தியம். சத்தியம். நான் மிருகத்திற்கும் தாழ்ந்த வனே! அம்மிருகங்களுக்காயினும் தம் குட்டிகளென்ற அன்பு உண்டு. என்னிடம் அதுவும் இல்லாமல் போய்விட்டது. நிரபராதனை குழந்தையை ஒருவள் தலையில்குட்டி அதட்டி அடித்து ஓட்டிவிட்டதை என் கண்ணாரக்கண்டேன். ஆ! சுநீதி! உத்தமகுணமுடையாளே! பாவியான என்னை நீ மன் னிக்கவேண்டும்.

சுநீதி:—மகாராஜா! தாங்கள் இவ்வாறு மன்னிப்பு கேட்கலாகாது. அச்சமயம் தங்களை மௌனமாக்கியது என் பாபமே அன்றி தங்கள் இச்சை அல்ல. ஆதியிலும் நம்ம நேசத்தை விலக்கி விட்டதும் என் பாபமே! இதில் தாங்கள் என்ன செய்தீர்கள்.

உத்தான:—ப்ரியே! உன்மீதில் ஆதியில் இருந்த என் கோபமும் பிடிவாதமும் துருவன் பிறந்தபின்பு எங்கேயோ பறந்துபோயின. இவனைப்பற்றி பலவாறு நான் எண்ணி பச்சாத்தாபமடைந்தேன். அந்தோ! உலகத்தார் நிந்திக்கும் அநீதியை நானல்லவோ செய்தேன்.

பந்துவராளி சாப்.

என்னாலே யல்லவோ ஏகினான் வனத்தை அருமைபாலன்
எங்குதான் சென்றானோ எதைத்தான் உண்பானோ அருமைபாலன் (1)
ஆசையுடன் வந்தான் ஆசனத்திலேற அருமைபாலன்
பேசாமலிருந்த என்னை அனுமதி கேட்டானே அருமைபாலன் (2)
துஷ்ட சேஷ்டையாலே தூரத்தப்பட்டாலும் அருமைபாலன்
துரோகி சுருசியை துதித்தேசென்றானே அருமைபாலன் (3)

அஞ்சுவருஷ பாலனை அஞ்சாது அடவிக்கு அனுப்பிய அடங்காச் சண்டாளனென்று என் குடிகளே என்னை ஏசுவார்கள். ஹா! இதற்கெல்லாம் நான் காரணமாய் ஆனேன்.

[சுருசி பிரவேசிக்கிறாள்.)

சுருசி:—நான்தான் காரணம். அக்காள்! நான்தான், அதற்கு சந்தேகமென்ன. நான் பரம சண்டாளி! துரோகி! பாலகாதுகை! என்னைக் கண்டவுடன் எல்லா பாவங்களும் வந்துசேரும். மழல்சொல் மாறாத குழந்தை என்னைத் தாயென்று சொன்னதற்கு நான் குற்றம் சாற்றினேன். வாழும் குழந்தையை காட்டிற்குப் போவென்றேன். அவன் காட்டிற்கு போனபின்பு அவனைக் கொல்ல எத்தனித்தேன். அக்காள்! நான் பிழைத்திருந்தால் உங்களுக்கும் மகாராஜாவுக்கும் இந்த தேசத்துக்குமே பெரிய அவமானம். என் பிள்ளை உத்தமனையும் உன்னிடம் ஒப்புவித்துவிட்டேன். மகாத்மாவான மகாராஜாவும் உத்தமியான நீயும் ஒற்று வீற்றிருப்பதைக் கண்டபின் உத்திரவு பெறலாமென்றிருந்தேன். இன்று நான் கண்டேன். மகாராஜா இதற்குக் காரணமில்லை என்று ஒருவரும் சங்கிக்காமலிருக்க காரியம் செய்கிறேன். மகாராஜா! நமஸ்காரம்! அக்

காள்! உத்திரவு! இன்றோடு என் உயிர் தொலைந்தது. ஆனால் பதிவ்ரதையான நீ நான் செய்த அபராதங்களை எல்லாம் மன்னித்துவிடவேண்டும். அப்போதுதான் என் ஆத்மா சமாதானமடையும்.

மாண்டு ரூபகம்.

(அயதரிஜீ ஜான்சுமரே என்ற மெட்டு.)

பொருத்தருள்வாய் பொருத்தருள்வாய்
பதிவ்ரதையே பொருத்தருள்வாய் (பொரு)

ஆசையுடன் அருகில்வந்த
அருமகனை அதட்டிவிட்டேன் (2)

எத்தனையோ எண்ணங்களை
எண்ணி எண்ணி எத்தனித்தேன் (3)

கொன்றுவிடவே குழந்தைதனை
குடிகெடிக்கும் கொடும்பாவி (4)

சுநீதி:—ஆ! ஆ! என்ன வார்த்தை இது. உயிரை ஏன் இழக்க வேண்டாம். உன்மீது யாது குற்றம். சர்வ வல்லமையுள்ள ஸநாதனின் செயலே ஆகும். ஆத்மஹத்யை என்பது எளிதான பாபமென் றெண்ணுகிறாயா! இதுகாறும் வளர்த்து வனத்திற்கே என்று பலிகொடுத்ததுபோல் பாலனை அனுப்பிவிட்டு கல்நெஞ்சத்துடன் இருக்கும் என்னைக்கண்டு நீங்கள் சமாதானமடைய வேண்டியதுதான். நடக்கவேண்டியது நடந்துதான் தீரும்.

சுருசி:—அக்காள்! நீங்கள் சொல்வது உண்மையே! எனக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தி நான் இறந்தாலும் மாறாது.

உத்தான:—சுநீதி! அவனைத்தேடி நாம் வனத்திற்குச் செல்வோமா!

சுருசி:—அவனை நகரத்திற்கே அழைத்து வந்துவிடுவோம்.

உத்தான:—போதும். வெட்கம் கெட்டவளே! வார்த்தையை அடக்கு.

சுநீதி:—துருவன் அடம்பிடித்தவன். அவனைத் திருப்புவது கஷ்டம். காட்டில் அவன் எங்கே இருக்கிறானோ?

உத்தான:—தூதர்களைவிட்டு அவனைத் தேடச்செய்வோம்.

[ஓர் சேவகன் வருகிறான்.]

சேவகன்:—மகாராஜ்! நாரதமுனிவர் வந்திருக்கிறார். மகாராஜா ஸமயம் விசாரிக்கிறார்.

உத்தான:—ஆ! நல்லசமயம்தான். வரச்சொல். (தூதன் போகிறான். ஸுநீதியைக் கண்டு) அவருக்குத் தெரியாதது யாதொன்றுமில்லை. உபாயம் சொல்லுவார்.

[நாரதரின் பிரவேசம். மூவரும் வணங்குதல்]

நாரத:—உத்தானபாதா! இது யார் அந்தப்புரம்.

உத்தான.—மகரிஷே! இது ஸுநீதியின் அந்தப்புரம்.

நாரத:—ஸுநீதியுடையபதா (சுருசியை சுட்டிக்காட்டி) இவள் யார்?

உத்தான.—(தயங்கி) சுருசி.

நாரத:—ஓகோ! இவள் தானே சுருசி! சுருசியும் உத்தானபாதனும் சுநீதியின் அந்தப்புரத்துக்கு வந்திருக்கிறார்கள். இங்கே ஏதாவது துக்க சம்பவம் உண்டோ?

உத்தான:—ஆம். உண்டு.

நாரத:—சரிதான் சேராததெல்லாம் சேர்ந்திருக்கிறதே என்று பார்த்தேன். சுபகாலங்களில் பழய கலகங்களை பாராட்டிக்கொண்டு எல்லோரும் கூடார்கள். துக்க சமயங்களில் எப்படிப்பட்ட விரோதிகளும் மெப்புக்காக தூரவாவது நின்று ஓடிப்போய் விடுவார்கள். இது சகஜம்தான்.

உத்தான:—சுவாமி! அப்படி மெப்புக்காக நான் வரவில்லை. அடங்காத துக்கம் கொண்டிருக்கிறேன். உலக நிந்தனைக்கு உள்ளாய்விட்டேன்.

நாரத:—உத்தானபாதா! நன்றாய் நானெல்லாமறிவேன். யார் என்ன செய்பக்கூடும். இளையாள் கிடைப்பது சாமான்யமல்ல. மேலும் சுருசி என்ற திவ்யநாமம் வாய்ப்பது சுலபமா? அவளுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாய் பேசுவது புருஷனுக்கு ஒத்ததா? பாமரர்களுக்கு இதின் அருமை என்ன தெரியும்.

உத்தான:—மகரிஷே! நான் செய்ததெல்லாம் அபசாரம். எனக்கு பச்சாத்தாபம் வந்திருக்கிறது. என்னைக் கார்க்கவேண்டும்.

நாரத:—சுருசி! நீ ஏன் இங்குவந்தாய்? மகனைக்கொல்ல மாளவில்லையே தாயின் வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்வோமென்று வந்தாய்!

சுருசி:—சுவாமி! தம்மை சரணமடைந்திருக்கிறேன். நான் மகா பாதகம் செய்துவிட்டேன். தாமேற்படுத்தும் எவ்வகை தண்டனையையுமடையக் கார்த்திருக்கிறேன். காப்பாற்றவேண்டும்.

உத்தான:—அச்சமயம் நான் புத்தியை இழந்துவிட்டேன் ஸ்வாமி!

சுநீதி:—மகரிஷே! இப்போது நம் மூவருடைய மனமும் ஒரே இடத்தைத்தான் நாடுகிறது. என் அருமை பாலன் துருவனுடைய விருத்தாந்தம் யாதொன்றும் நமக்குத் தெரியவில்லை. அவனைத் தேடிச் செல்ல எத்தனித்திருக்கிறோம். திரிலோக சஞ்சாரியான தாம் அவனை அறிய அநேக சந்தர்ப்பங்களுண்டு. எங்களிடம் தயவுகாட்டி அவனிருப்பிடத்தைச் சொல்ல பிரார்த்திக்கிறோம்.

நாரத:—கவலை வேண்டாம். உத்தானபாதா! உன் முன்னோர்கள் ஒருவரும் அடைந்திராத உன்னத பதவியைப் பெற்றே அவன் இந்த நகரத்திற்கு திரும்புவான். உலகில் மிகுந்த கீர்த்தியைப் பெறுவான். அவனால் உங்கள் குலத்திற்கே பெருங்கௌரவம் விளையப்போகிறது. நீங்கள் அவனைத் தேடிச் செல்வதில் பிரயோஜனமில்லை. நான் நேரில் அவனை சந்தித்து, அவன் மனோநிலையை சோதித்து, துவாதசாக்ஷரியை உபதேசித்து, தபோமார்க்கத்தைக் கற்பித்து, மதுவனத்திற் கனுப்பித்து, நன்றாய்க் களித்து, இங்கே வந்திருக்கிறேன். இப்போது அவன் காமாதிகளை விலக்கிச் சமாதியிலிருந்து வருகிறான். சீக்கிரமே மாதவனுலருள்பெற்று மாதவனாகித் திரும்புவான். இதைச்சொல்லவே நான் இங்கே வந்தேன். போய்வரவா!

உத்தான:—மகரிஷே! இந்த பரமானந்தத்தைத் தந்த தமக்கு நான் எந்த கைம்மாறைப் புரிவேன்.

நாரத:—உத்தானபாதா! எனக்கு ஒன்றும் வேண்டாம். வனத்தினின்றும் வரும் உன் வத்ஸனுக்கே உன் அந்தரங்கத்துடன் நீ முடிசூட்டவேண்டும். இதுதான் உன்னுடைய கடமை. சுருசிக்கு செய்த வாக்குத்தத்தம் காமாதுரத்தால் செய்ததால் அது செல்லாது.

[சுநீதி ஆச்சர்யத்துடன் பார்க்கிறாள். சுருசி லச்சைப் படுகிறாள்.]

உத்தான:—மகரிஷே! சித்தமாய்க் கார்த்திருக்கிறேன். தங்கள் பாதசாக்ஷியமாய் இது சத்தியம். அந்த பாக்கியமும் எனக்கு ஏற்படுமா?

நாரத:—அஞ்சாதே! இன்றைக்கு ஆருவது மாதத்தில் ஏற்படும். நான் போய்வருகிறேன்.

[மூவர்களும் வணங்கவும் நாரதர் போகுதலும்.]
படுதா விழுகிறது.

4-வது சீன்.

நடுக்காடு.

துருவனுடைய தபசு.

[துருவன் உட்கார்ந்திருக்கிருன். யோகசாகரனும் தபோதேவனும் உற்றுப்பார்க்கிருர்கள்.]

யோகசாகரர்:—ஓய் தபோதேவரே! நீர் பெருத்த பண்டிதனுக்கும் நிறுத்துமய்யா!

தபோதேவர்:—அய்யா! நான் இல்லே. தாங்கள்தான். ஆக்ஷேபமென்ன?

யோகசா:—ஐந்துவருஷ சிசு தபஸ்செய்கிறது. இதைக் கெடுக்க முடியவில்லே. உமக்கு வாய்வேறு. எல்லாத்துக்கும் உங்கள் பழய கந்தபுராணத்தை அவிழ்க்காதேயும்.

தபோதே:—ஐயா! என்கதை கந்தபுராணமாயிருக்கட்டும். இந்தக் குழந்தையின் தபஸ்ஸைக்கெடுக்க எனக்கு இஷ்டமில்லேஎன்று வைத்துக்கொள்ளும்.

யோகசா:—இதென்ன கௌரவப்பேச்சு. உம்மால் முடியவில்லே என்று சொல்லும். உங்கள் வேலேத்திறமெல்லாம் அங்கே பலிக்காது. முதல் மாதத்தில் மூன்றுநாளுக் கொருதடவை இலந்தை விதைகளே சாப்பிட்டு தவம்செய்தான். இரண்டாவது மாதத்தை பழுத்த தழைகளே சாப்பிட்டு கழித்தான். ஒன்பதுநாளுக் கொருதடவை ஒரு சரங்கை ஜலம் குடித்து மூன்ருவது மாதத்தைப் போக்கினுன். நான்காவது மாதத்தில் அதுமில்லே. பன்னிரண்டுநாளுக் கொருதடவை காற்றை பானம்செய்து தவம்புரிந்தான். இப்பேர்ப்பட்டவனேயா நீர் ஜெயிக்கப்போகிறீர்.

தபோதே:—அய்யா இந்தகதைதான் உங்களுக்கும். உங்கள் யோக்யதையும் அவ்வளவோடுதான். இப்போது நடப்பது ஐந்தாவது

மாதம். வாயுபானம் செய்வதையும் நிறுத்திவிட்டான். இப்போது பகவானை ஹிருதயத்தில் தியானம் செய்துகொண்டு அஸம்பிரஞ்ஞாதமென்ற சமாதியிலிருந்து வலுத்த யோகத்தை கைக்கொண்டிருக்கிறான். யோகசாகரராயிற்றே! எங்கே உங்கள் சாமர்த்தியம் காட்டும். பார்ப்போம்.

யோகசா:—அது கிடக்கிறது. கோபித்துக்கொள்ளாதேயும். நம்மிருவர்களாலேயும் இவனுடைய தவத்தை கெடுக்க முடியவில்லை என்பது நிச்சயமே. இனி தேவராஜனிடம்போய் நாம் என்ன சொல்வது. இன்றோடு நம்ம உத்தியோகம் தொலைந்தது.

தபோதே:—இனி வார்த்தையாடுவதில் என்ன பிரயோஜனம். போவோம் வாரும். இனி நம் தேவமாயைகளைக் காட்டிப் பார்ப்போம்.

யோகசா:—வேறு வழி ஏது. போவோம். அதிலும் அவன் தபஸ்ஸினின்றும் எழுந்திருக்காமலிருப்பானா?

[இருவர்களும் போகிறார்கள். யானை சிங்கம் புலி காடி காண்டாமிருகம் முதலிய துஷ்ட மிருகங்கள் சமீபத்தில் வருகின்றன. பாம்புகள் சரீரத்தில் ஊர்ந்துபோகின்றன. வண்டுகளும் குழவிகளும் வந்து மோதுகின்றன. பயங்கரமான சப்தங்கள் உள்ளே உண்டாகிறது. இரண்டு வேதாளங்கள் பிரவேசிக்கின்றன.]

ஒன்று:—அடேடேடேடேடே.

இரண்டு:—ஓகோகோகோகோகோ.

ஒன்று:—ஏஎய்! ரொம்ப நாளாச்சுதுடா!

இரண்டு:—ஆமாண்டா! ஆமாண்டா! ரொம்போ நாளாச்சுடா? ரொம்போ ரொம்போ ரொம்போ நாளாச்சுடா!

ஒன்று:—அடே வாசனே வருதுடோய். கம்ம்ம்ம்ம்.

இரண்டு:—ஏய் ஏய் ஏய். அப்படியல்லடா. கும்ம்ம்ம்ம்.

ஒன்று:—பலே பலே பலே பலே (கூத்தாடுகிறது)

இரண்டு:—ஏண்டா ஏண்டா.

ஒன்று:—மனிசா வாசனே டோய்.

இரண்டு:—உம். உம். அத்தானே. ரோசனே பண்ணே. பலே பலே. அம்மாத்தனே அது இருக்குணும்டா. அடா வாசனே வலுவாத்தான் இருக்குது.

ஒன்று:—ஏய்! ஏய்! பேசாதே! சும்மாஇரு. கிட்டத்தான் இருக்கு.

இரண்டு:—ஆமாண்டா!

ஒன்று:—ஆம்டுகிணும்! ஆம்டுகிணும்!

இரண்டு:—உடாதே! உடாதே! கபக்குண்ணு அம்மிடுவோம்.

ஒன்று:—அடே போடா! சின்னப்பயடா!

இரண்டு:—கிடச்சுது போதும்டா! வெள்ளரிபிஞ்சுகணுக்கா இருக்கும்.

ஒன்று:—அடே! ஏண்டா! ரோசனே பண்ணுரே! திண்ணுடுவோம் வாடா!

இரண்டு:—ஹா! ஹா! ஹா!

[துருவன் சலிக்காமலிருக்கிருன்.]

ஒன்று:—அது பரப் பொம்மையடா. வாடா.

[இருவர்களும் போகிருர்கள். ஒரு ராக்ஷஸன் அட்டகாசம் செய்துகொண்டு வருகிருன்.]

ராக்ஷஸன்:—அண்டமுதல் அகண்டித விண்டல மண்டல குண்டல எண்டிசை கொண்டல்சள் சென்டுகள்ளுண்டுழ, டுண்டுண்டென திண்டிம முதலிப சிறுபறை அறைய தாமுறசொலி நிறைபெற, அரசர்கள் குறைபெற எட்டு திக்குகள் பட்டகரிகள் குபீர் குபீரெனப் பாய, அண்டகூடாகங்கள் பேதிக்க, சத்துரு கணங்கள் சேதிக்க, வாத்தியகோஷங்கள் கோஷிக்க, அச்சாணி முறிய, ஆப்புக்கழள, தேர்தட்டு முறிய, ஸாரதிவிழ, வீராவேசத்தோடே, சிம்ஹநாதத்தோடே, அட்டஹாஸத்தோடே, எக்கிலிகெட்டித் திக்காரம்செய்து, எதிரிகள் தண்ணீர் தண்ணீர் என்று தவிக்க, தொடுக்குங்கால் ஒன்ருகவும், விடுங்கால் நூருகவும், போகுங்கால் ஆயிரமாகவும், எதிரிகள் மேல் பாயுங்கால் சங்கோப சங்கமாயும் விளங்கக்கூடிய அஸ்திர சஸ்திரங்களை எடுத்து முன்காலே வைத்து, பின்காலே தூக்கி, உதடை மடித்து, பற்களைக் கடித்து, நாண்வளைத்து எதிரிகளுள்ள ரணகளத்தில் யுத்தம் புரிகின்ற நான் இதோ வந்தேன் வந்தேன். எனக்கு பசி பசி பசி. விடேன். எனக்கு சிறிசு

தானே ருசி. கண்ணைமூடி உட்கார்ந்துவிட்டால் விடுவேனா? இதோ போகிறேன். ஹா! ஹா! ஹா!

[சமீபத்தில் சற்று நின்று சப்தம்செய்துவிட்டு உள்ளே போகிறான். மாயா சுநீதி பிரவேசிக்கிறாள்.]

மாயாசுநீதி:—இங்கா இருக்கிறாய். என் கண்ணே! உன்னைக் கண்டேனே! என் பாக்கியமே பாக்கியம். கண்ணைத் திறந்து பார். நான்தான் உன்தாயார் சுநீதி. என் குரலாலேயே உனக்கு அடையாளம் ஏற்படுமே! கண்ணைத் திறந்துவிடு. தபசு வேண்டாம். சொல்கிறேன் கேள். நீ காட்டிற்கு போன செய்தி எட்டினவுடன் என் வீட்டிற்கு மகாராஜா கால்நடையாய் ஓடிவந்தார். உன் சிறிய தாயாரும் என் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டாள். இது ஆச்சர்யமல்லவா! கண்ணைத் திறந்துபார். உனக்கே இராஜ்யம் நிச்சயம். இதைச் சொல்லவே நான் வந்தேன். தவம் வேண்டாம். தவத்தால் கிடைக்க வேண்டியது இப்போதே கிடைத்தாய்விட்டது. வீணாய் உன் சரீரத்தைக் கெடுத்துக்கொள்ளாதே! என் வார்த்தையைக் கேள். நான் இவ்வளவு கதறுகிறேன். ஈவு இறக்கமில்லையா! மூர்க்கா! தாயென்ற கௌரவமும் உனக்கில்லையா! தாய் வார்த்தையைக்கேளாதே என்று உனக்கு உபதேசம். கல் நெஞ்சனே! பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லென்பது சரியாகவே இருக்கிறது. முடியாதென்று சொல்லிவிடு. போய்விடுகிறேன். அயோக்யா! அநாதைப்பயலே! ஏனடா இந்த ஏழைக்குரும்பு. மாதுர் துரோகி! நீ இவ்வாறு செய்வாய் என்று எண்ணவே இல்லை. கடைசிமுறை கேட்கிறேன். பதில் சொல். அல்லது கண்ணையாவது திற. அல்லது தலையையாவது அசக்கு. உனக்கு புத்தியைச் சொல்ல ஒருவருமில்லையா! (பெருங் குரலுடன்) ஐயோ! துருவா! துருவா! ஏதோ ஒரு கொள்ளி வாய் பிசாசு விரைவாய் வருகின்றதே. ஐயோ! நானெங்கே போவேன். கண்ணைத் திறந்துபாரடா! பயமாயிருக்கிறது. பார்க்கமாட்டாயா! மாட்டாயா!

[உள்ளே ஓடிவிடுகிறாள். ஓர் கொள்ளிவாய்ப் பிசாசு பயமுறுத்திப் போய்விடுகிறது. நாரதர்பிரவேசிக்கிறார்.]

நாரதர்:—ஆகா! என்ன மனோகரமான தேசம். என்ன அற்புதமான காக்ஷி. என்ன உல்லாசமான கோலம். இவ்வகை

சம்பவங்களை தரிசிப்பது அன்றோ ஜன்மாவுக்கு ஸாபல்யம். ஆகா! இதல்லவோ தபஸ். என்ன இந்திரிய நிக்கிரஹம். என்ன மனோஸங்கிரஹம். என்ன ஆசாரம். என்ன பிரம்ம விசாரம். மகேந்திரனால் பிரேரபிக்கப்பட்ட யாமர்களென்ற தேவர்கள் பலவகை மாயங்களைக்காட்டிச் சலிக்கச் செய்தும் இவனுடைய மனம் பச்சைமரத்தாணிபோல் பரந்தாமனிடம் பதிந்து விட்டது! ஆகா! மனதை நிறுத்த வேண்டுவது இவ்வாறுதான். அசாத்தியமானவைகளை எளிதில் தரும் அதிசயசக்தி மானிடம் இம்மனமாகிற சிந்தாமணியை உப யோகிப்பதுதான் அழகு. உபயோகிப்பதால் உத்தமபலனும் சித்திக்கும். கர்துமகர்துமன்யதாகர்தும் சக்திமானான வாஸு தேவனுடைய தங்கத் திருவடி மாணிக்கங்களின் நடுவில், தன் மனமாகிற மணியை பதியவைத்து ஆனந்தானுபவம் அடை ந்துவருகிறான். அப்பரமானந்தக் கடலில் மூழ்கிய இவனுக்கு தேவதைகளின் துச்சமான அதட்டலும் மிரட்டலுமாபாதகம். அகிலாண்ட மண்டலத்திற்கும் ஆதாரமான அகண்ட பிர்ம்ம த்தை தன் பக்தி பாசத்தால் கட்டித் தன் மனதிலேயே நிறு த்திவிட்டதால் இவ்வீரேழு புவனங்களும் கட்டுண்டு கலகலவெ ன்று நடுங்குகின்றது. இவன் சுவாச பந்தம் செய்துவிட்டப டியால் எண்பத்திநான்குலக்ஷஜீவராசிகளும் மூச்சுவிட முடியா மல் திண்டுமுண்டாடுகிறார்கள். இதைத் தெரிவிப்பதற்காக முப்பத்திமுக்கோடி தேவர்களுடன் சதுர்முகனும் க்ஷீரசமுத் திரமேகியிருக்கிறார். ஹே! ஜகதீசா! தீனசரண! அநாத பந்தோ! ஆபத்பாந்தவ! மாதவ! மதுஸூதன! போதும் பக்தனைப் பரீக்ஷித்தது. பஞ்சவர்ஷ பாலனாயினும் பஞ்சபஞ் சேந்திரியங்களையும் வஞ்சித்து, அதிசஞ்சலமான மனதை மஞ்சமாக்கி, அகிஞ்சன பந்துவான தங்களை அங்கு எளப் பண்ணி, பிரபஞ்ச விலக்ஷணனாய் விளங்குகிறான். தங்களு டைய முகோல்லாஸ பூதயான பிரஸாதத்திற்கு காரணமான பக்திரஸம் இவனிடம் சம்பூர்ணமாய் நிறைந்திருக்கிறது. கரு ணாஸமுத்ரா! தங்களிடம் இன்னமும் கிருபையாகிற பிரபை உதிக்கவில்லையா! தங்களுக்கேது பக்ஷபாதம் இப்போதும். மாடு வெட்டும் தர்மனென்ற வேடனுக்கு தாம் மகிழ்ந்தது அவனுடைய மகிமையாலோ? விதுரனுக்கு விதுரனாயிருந்தது

அவன் ஜாதியாலா? உக்கிரஸேன மஹாராஜாவின் உக்கிரமா உம்மை வணங்கச் செய்தது? கூனியை ராணியாக்கினது அவள் மேனியா? குசேலரை கும்பிட்டது அவர் உடுத்த உடையாலா? ஏன் இச்சிறு குழந்தையின்மீது உபேக்ஷை. மகரியிடம் சிக்கிய கரியை கமலம் பெற்று தாம் கார்க்கவில்லையா? நிர்மலமான தன்மனமாகிற கமல மலரை தமக்கு சமர்ப்பிக்கிறான். அப்பெருத்த பலசாலியைக் கார்க்க கருடனை விட வேகமாய் ஓடினீரே! பால்வடு மாறாத பஞ்சவர்ஷ பாலனை பாதுகார்க்க பறந்தோடி வரலாகாதா? ஹே! கமல நயனா! ஹே! கமலாகளத்ர! ஹே! விமலகாத்ர! ஹே! புண்ய சரித்ர! ஹே! வாஸுதேவா!

(வெடிசப்தம்.)

[சங்கு சக்கரங்களுடனும், நால் புஜத்துடனும் கருடன் மீதேறி நாராயணனின் தரிசனம். துருவன் மௌனமாயிருத்தல். நாராயணன் தன்சங்கத்தால் அவன் கண்ணத்தைத்தடவுதல். உடனே துருவன் தோத்திரம் செய்தல்.]

துருவ:—ஹே! தேவ! தேவதேவ! தேவதாசார்வபௌமா! தேவகுலதீப! தேவதா சூடாமணே! நமஸ்காரம். நமஸ்காரம். பெண்டு பிள்ளைகளென்ற பாசத்தால் கட்டுண்ட ஜனங்கள் தங்கள் மாயையாகிற திரையால் மறைக்கப்பட்டு எல்லோருடைய ஹிருதயத்தில் குடிகொண்டிருக்கும் தம்மை அறியாமல் அகாதமான இந்த சம்சாரமாகிற சமுத்திரத்தில் வீழ்ந்து மாழ்கிறார்கள். வாத்ஸல்யமென்ற மகாகுணம்பொருந்திய கல்யாணகுணராசியே தமக்கு நமஸ்காரம்.

நாராயணன்:—துருவா! மெத்த சந்தோஷம். உன் அபிப்பிராயத்தை அறிவேன். அப்படியே வரங்களையும் அளித்திருக்கிறேன். ஒருவரும் இதுவரை அடைந்திராத உன்னத பதவியை உனக்கு தந்திருக்கிறேன். உனக்காகவே அது சிருஷ்டிக்கப்பட்டு துருவக்ஷிதி என்ற நாமத்தால் விளங்கும். ஸப்தரிஷிமண்டலங்கள் நவகிருஹமண்டலங்கள் முதலியவைகளும் உன்னைத்தான்சுற்றிவரும். உன்மண்டலம் ஓர் பிரம்ம கல்பம் வரையில் அழிவற்றது. உன் தாயார் சுநீதியும் நக்ஷத்திரஸ்வரூபமாய் உன்னோடு உன் மண்டலத்திலேயே வாசம் செய்

வாள். இப்புவியிலும் முப்பத்தி ஆறுயிரம் வருஷங்கள் சரி யான வலுவோடு சக்கரவர்த்தியாய் இருப்பாய். உத்தமமான கீர்த்தி உன்னைத் தொடர்ந்து வரட்டும். நித்ய மங்களமுண் டாகட்டும்.

(வெடிசப்தம்)

[நாராயணன் மறைகிறார். நாரதர்செல்லுதல்.]

ஹா! நாராயணா! வாஸுதேவா! எங்கு சென்றீர்!

படுதா விழுகிறது.

5-வது சீன்.

துருவன் பிரவேசம்.

துருவ:—நாராயணா! என்ன தங்கள் மாயை! இப்படியா நான் மோசம் போகவேண்டும். விலங்கை விலக்கக்கூடிய தேவதா சக்கிரவர்த்தியான தங்களை தரிசித்துப் பேசியபின்பும் இரும்பு விலங்கு வேண்டாம் தங்க விலங்கு வேண்டும் நான் தங்க விலங்கு வேண்டுமென்று கேட்டது போலாயிற்றே! எது வும் பந்தமல்லவோ! அழிவற்ற பரமாநந்தத்தைத் தரும் மோக்ஷத்தை கேட்காமல் பாழாய்ப்போகும் துச்சமான ஸம் ஸார சுகத்தை மறுபடியும் நினைத்தேன். நான் நினைத்திருந் ததையல்லவோ அவர் எனக்குத் தந்தார். இனி நான் என்ன செய்யலாம். நகரத்திற்கே செல்கிறேன்.

[சுநீதி, சுருசி, உத்தானபாதன், விதூஷகன் பிரவே சிக்கிறார்கள். சுருசியையும் பின்பு எல்லோரையும் துருவன் வணங்குகிறான்.]

உத்தான:—குழந்தாய்! சௌக்கியமாய் நீ திரும்பிவருவதைக் கண்டேனே! என் பாக்கியமே பாக்கியம்.

சுருசி:—உத்தமியின் மகனே! என் அபராதங்களைப் பொ . . . னையா! முதலில் என்னையா நீ வணங்குவது.

துருவ:—தாயே! தாங்கள் எனக்கு செய்தது அ . . . க்கு அது அநுக்கிரஹமே! இல்லா . . . எனக்கு கிடைப்பதெப்படி.

சுநீதி:—கண்மணி! நான் பாக்யவதிதான். உன் எண்ணம் நிறைவேறியதா! உன்னைத் தழுவுகிறேன். கல்பாந்தம் கடுந்தவம் புரியும் யோகிகளுக்கும் எட்டாத அந்த அரியின் அங்கசங்கமடைந்த உன் சரீரத்தை தொடுவதே என் பாக்கியம்.

உத்தான:—துருவா! உன்னுடைய கோர தபஸ்ஸையும் அற்புதமான அரியின் அனுக்கிரஹத்தையும் நாரதரால் கேட்டேன். பரமாநந்தமடைந்தேன். நேரமாகிறது. அரண்மனைக்குப் போவோம். உனக்கு பட்டாபிஷேகம் செய்ய எல்லாம் சித்தமாயிருக்கிறது.

[துருவன் சுருசியைப் பார்க்கிறான்.]

சுருசி:—அவஸ்யம் போவோம். நீதான் எனக்கு மூத்தகுமாரன். ஆசையின் மேலாடிய என் வார்த்தையை நீ பொறுக்கவேண்டும்.

[எல்லோரும் போகிறார்கள்.]

6-வது சீன்.

பட்டாபிஷேகக் காக்ஷி.

இருபுறங்களும் இரத்தின விளக்குகள் வைக்கப்பட்டு தர்பார் மண்டபம் வெகு சிங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. பசுக்களோடு சதுரங்கசைன்யங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. எல்லா வர்ணத்தார்களும் நின்றிருக்கிறார்கள். கன்னிகைகள் தேவதா[illegible]கள் பூர்ணகும்பங்களையும் காதீபங்களையும் ஏந்திருக்கிறார்கள். சுநீதி சுருசி உத்தமன் சமீபத்திலிருக்கிறார்கள். துருவனுக்கு சந்தனம் புஷ்பம் முதலியவைகளால் மரியாதை செய்து எல்ல[illegible] வாத்தியங்களும் முழங்க உத்தானபாதன் இரத்தின முடி[illegible] துருவன் தலையில் வைக்கிறான். செங்கோலை கையில் தருகிறான். பிராமணர்கள் ஆசிர்வதிக்கவும் வேசிகள் பாடவும் கன்னிகை[illegible]த்திகை செய்யவும் எல்லாம் மங்களம்!

படுதா விழுகிறது.

3-வது அங்கம் முற்றிற்று.

விற்பனைக்குத் தயார்.

வேதமூர்த்தி பாரதாச்சாரியார் எழுதிய | ரூ. அ.

மகாபாரதம் சாந்திபர்வம் (தமிழ் 1100 பக்கங்கள்) ... 3—8

மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் ஏழாவது அத்தியாயம்
(கன்னடம்)... 0—6

ஆர்யாபாகவதம் (ஸமஸ்கிருதம்) ... ... 1—0

விதவா விவாக கண்டனம் (ஸமஸ்கிருதம்) ... ... 1—0

நவரத்ன மாலை, நியதிப்ரஞ்சாசத் முதலியவைகள் சேர்ந்த
சந்திரரத்னமாலை முதற்பாகம் (ஸமஸ்கிருதம்) ... 0—

பாகவத ரேங்கனுதாச்சாரியார் எழுதிய

பாரதாசாரியார் சரித்ரஸங்கிரஹம் (ஸமஸ்கிருதம்) ...

மணிமஞ்சரீ வியாக்யானம் (ஸமஸ்கிருதம், கன்னடம்) ... 1—

த்வைதமத விளக்கம் (தமிழ்) ... 0—

துருவன் (தமிழ் நாடகம்) ... 0-1

For copies Apply to:—

☞ பாகவத ரேங்கனுதாச்சாரியார்,

வியாஸ விலாஸம், கும்பகோ